ஆரம்பக்கல்வி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்.

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 } ஆகஸ்ட் 1959 { இதழ் 8

கேரளம் புகட்டும் பாடம்!

இந்தியக் குடியரசுத் தலைவரால் 31-7-59 அன்று பிறப்பிக்கப்பட்டது ஒரு முக்கியமான உத்தரவு. அந்த உத்தரவைக் கேரள மாநிலத்தால் மறக்கமுடியாது; இந்திய அரசாங்கத்தால் மறக்கமுடியாது; இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றுச் சுவடியாலும் மறக்கமுடியாது. ஏனென்றால், அந்த உத்தரவின்படிதான், 28 மாதங்களாகக் கேரள மாநிலத்தை ஆட்சி புரிந்துவந்த கம்யூனிஸ்ட் அமைச்சரவை விலக்கப்பட்டது; சட்ட மன்றம் கலைக்கப்பட்டது; கேரள மாநிலம் முழுவதும் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. கூடிய விரைவில் புதியதோர் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்றும், அந்தத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெறுகிற கட்சி புதிய அமைச்சரவையை அமைக்கும்வரையில் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியே

தொடர்ந்து நடைபெறும் என்றும் இந்திய அரசாங்கத்தின் சார்பில் விளக்கமும் தரப்பட்டிருக்கிறது.

இத்தகைய அதிதீவிர நடவடிக்கைகளைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்ள வேண்டிய அளவுக்குக் கேரள நிலைமை சீர் கெட்டதற்குக் காரணம் என்ன? இந்தக் கேள்விக்குரிய விடையை அனைவரும் அறிவர். ஜூன் மாதம் 12-ம் நாளன்று அந்த மாநிலத்தில் இருக்கும் எதிர்க்கட்சிகள் அத்தனையும் ஒன்றுசேர்ந்து ஒரே கூட்டணியில் நின்று மாபெருங் கிளர்ச்சி ஒன்றைத் தொடங்கின. அந்தக் கிளர்ச்சியின் மூல முழக்கம், கேரள அரசாங்கம், கேரள மக்கள் பெரும்பாலோரின் நம்பிக்கையை இழந்துவிட்டதால், அது உடனடியாகப் பதவியிலிருந்து விலகவேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். இப்படி ஒரு முழக்கத்தை எழுப்புவது முறையான செயல்தானா அல்லவா என்கிற பிரச்சினையை எழுப்ப நாம் விரும்பவில்லை - ஆனால் நாளாக ஆக கேரளம் முழுவதிலுமிருந்து இந்த முழக்கத்திற்கு ஆதரவு திரண்டு வந்தது என்பதையும், பொதுவுடைமையாளர்கள் தவிர ஏனைய கட்சியினர் அனைவரும் கிளர்ச்சியின் ஆதரவாளர்களாக அமைந்தனர் என்பதையும், ஏறத்தாழ ஒரு இலட்சம்பேர் கிளர்ச்சியில் ஈடுபட்டுச் சிறை வாழ்வு ஏற்றனர் என்பதையும், அரசாங்கத்தார் நான்கு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்து தீரவேண்டிய அளவுக்கு அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சி வலுவடைந்திருந்தது என்பதையும்,சட்டபூர்வமான அமைதி என்பது கேரளத்தில் காணப்படாத ஒரு பொருளாக மாறி விட்டது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டுமானால், அந்த இரண்டையும் நிலைநாட்ட முடியாத நிலைக்கு ஆளாகிவிட்ட அமைச்சரவையை விலக்கிவிட்டுக் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியைக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழி இல்லை என்பது இந்திய அரசாங்கத்தின் வாதம். "அது அல்ல உண்மை வேறு வழிகள் பல உண்டு" என்பது வேறு சிலரின் வாதம். இந்த இரண்டு வாதங்களிலே எந்த வாதம் சிறப்புமிக்கது என்பதை ஆராய்வது நம்முடைய நோக்கமல்ல ஆனால் இந்த நேரத்தில் நாம் சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம், கேரள அமைச்சரவை கலைக்கப்படவேண்டிய அளவுக்கு அந்த மாநிலத்தில் அமைச்சரவை மீது வெறுப்பும் பகைமையும் ஏன் ஏற்பட்டன என்பதைத்தான். அமைச்சரவைமீது ஏற்பட்டிருந்த வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் பலர் பல காரணங்களைச் சுட்டிக் காட்டக் கூடும். அந்தக் காரணங்கள் எல்லாவற்றிலும் மிக முக்கியமான காரணம், கேரள அரசாங்கத்தார் நிறை வேற்றிய கல்விச் சட்டமே ஆகும். கல்விச் சட்டம் என்கிற விதையை விதைத்துத்தான், கேரள அமைச்சரவையினர்,

தங்களுடைய மாபெரும் வீழ்ச்சி என்கிற பயிரை அறுவடை செய் திருக்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஆசிரியர்களாக நியமிக்கப்படக் கூடியவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை அரசாங்கத்தார் வெளியிடுவார்கள் என்றும், தனியார் பள்ளிக்கூட நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளில் காலியாகக்கூடிய ஆசிரியர் பதவிகளுக்கு அந்தப் பட்டியலில் காணப்படுகிற ஆசிரியர்களை மட்டுமே நியமிக்க வேண்டும் என்றும், அந்தப் பட்டியலில் காணப்படாத ஆசிரியர்கள் எவ்வளவுதான் தகுதியும் திறமையும் உடையவர்களாக இருந்தாலும் அவர்களை நியமித்தல் ஆகாது என்றும் அந்தக் கல்விச் சட்டம் தெரிவிக்கிறது. அரசாங்கத்தால் விரும்பப்படுகிற ஆசிரியர்களைத்தான் தனியார் பள்ளிக்கூடங்கள் நியமிக்க வேண்டுமே தவிர தங்களுக்குப் பிடித்தமானவர்களை நியமிக்கக்கூடாது என்பதே இந்தச் சட்டத்தால் ஏற்படும் நிலைமை. அமைச்சரவையினர் எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்தக் கட்சியின்மீது பற்றும் பாசமும் உள்ள ஆசிரியர்களே அரசாங்கத்தார் வெளியிடும் பட்டியலில் பெரும்பான்மையோராக இருப்பர் என்பது எதிர் பார்க்கக்கூடிய ஒரு நிலைமையே ஆகும். இத்தகைய ஒரு விபரீதமான நிலைமையைத் தனியார் பள்ளிக்கூடங்கள் எப்படித்தான் சகித்துக்கொள்ள முடியும்? ஆசிரியர்களை நியமிக்கிற உரிமைகூடப் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு இல்லையென்றால் அவர்கள் பள்ளிக்கூடங்களை எதற்காகத்தான் நடத்தவேண்டும்? இத்தகைய அடிப்படை உரிமைகள் கூட இல்லாத ஒரு வாழ்வும் வாழ்வு ஆகுமா?

இந்த உண்மைகளையெல்லாம் எண்ணிப் பார்த்த தனியார் பள்ளி நிர்வாகிகளில் பெரும்பாலோர், இத்தகைய அநீதி நிரம்பிய கல்விச் சட்டத்தை எதிர்ப்பதன் அறிகுறியாகக் கோடை விடுமுறைக்குப் பிறகு தங்கள் பள்ளிக்கூடங்களைத் திறக்கவில்லை. இவர்கள் இப்படிச் செய்ததன் விளைவாகக் கேரள மாநிலம் முழுவதும் பெரியதோர் பரபரப்பு ஏற்பட்டது. இந்தப் பரபரப்பு அதிருப்தியாக மாறி, அதிருப்தி கிளர்ச்சியாக உருவெடுத்தது.

கல்வித்துறையில் அரசாங்கத்தார் உருவாக்கிய குழப்பத்தின் காரணமாக மக்கள் மன்றத்தில் பெருங்கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டதைக் கண்ட ஏனைய பலர் வேறு பல காரணங்களால் தங்கள் தங்கள் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த அதிருப்தி உணர்ச்சிக்கும் கிளர்ச்சி உருவம் கொடுத்தனர். இப்படிப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பற்பல சாரரால் தொடங்கப்பட்ட பலவகைக் கிளர்ச்சி

களும் ஒரே நேரத்தில் விழி வெடித்த காரணத்தால் அமைச்சரவை யால் தாங்கமுடியாத அளவுக்கு எதிர்ப்பு அணி பலம் பொருந்திய தாக மாறி விட்டது. கல்வித் துறையில் மட்டும் அரசாங்கத்தார் தலையிடாமல் இருந்திருந்தால், பள்ளிக்கூடங்களை மூடித் தீரவேண் டிய நெருக்கடி தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்பட்டிராது. அவர்கள் தம் பள்ளிகளை மூடாமல் இருந்திருந்தால் அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சியை மிகப் பெரிய அளவில் தொடங்குகிற தைரியம் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டிராது. ஆகையால்தான், கேரள அமைச்சரவை கலைக்கப்படவேண்டிய நிலை உருவானதற்கு மூல காரணம் கல்விச் சட்டமே என்று நாம் திட்டவட்டமாகக் கருத வேண்டியிருக்கிறது. என்றையதினம் கேரள அமைச்சரவை, தனி யார் பள்ளிக்கூடங்களின் தலை சிறந்த உரிமைகளைப் பறிக்கத் தொடங்கியதோ அன்றையதினமே தன்னுடைய வாழ்வுக்கு அழிவைத் தேடிக்கொண்டது அது.

கேரளத்தை ஆண்டுவந்த பொதுவுடைமை அமைச்சரவை மட்டு மல்ல, சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை மாநிலத்தை ஆண்டு வந்த இராஜகோபாலாச்சாரியார் அமைச்சரவை அழிவுற்றதும் கல்வித் துறையில் தலையிட்ட காரணத்தால்தான். தகப்பனார் செய்கிற தொழி லையே பிள்ளைகளும் மேற்கொள்ளவேண்டும்—அதற்கு ஏற்ற வகையி லேயே பள்ளிக்கூடங்களில் புகட்டப்படுகிற கல்வி அமையவேண்டும் என்கிற மூலக் கருத்தை மையமாகக் கொண்ட குலதர்மக் கல்வித் திட்டத்தை வெளியிடுகிற வரையில் அன்பர் இராஜகோபாலாச்சாரி யாரின் அமைச்சரவை யாராலும் அசைக்க முடியாத ஆற்றலும் வன் மையும் பெற்றிருந்தது. ஆனால் ஆயிரமாயிரம் மக்களின் உள்ளத் தில் வேதனை வெள்ளத்தைப் பாய்ச்சிய அந்தக் கல்வித் திட்டம் வெளி வந்தவுடன் ஆச்சாரியாரின் அமைச்சரவை ஆட்டங் காண ஆரம்பித்து மிக விரைவில் கவிழ்ந்தும் போயிற்று. அன்பர் ஆச்சாரி யார் மட்டும் அனைவர் வெறுப்புக்கும் ஆளான அந்தக் கல்வித் திட் டத்தைக் கொண்டு வாராமல் இருந்திருந்தால் அவருடைய அமைச் சரவை மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்திருக்கும். அப்படி இருந்திருந்தால் அவர் காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகவேண்டிய நெருக்கடிக்கோ, சுதந்திரா கட்சி என்கிற ஒரு தனிக் கட்சியைத் தொடங்கவேண்டிய கட்டாயத்துக்கோ ஆளாகியிருக்க மாட்டார். சுதந்திரா கட்சியின் தோற்றத்தால் காங்கிரஸ் கட்சிக்கு இப்போது ஏற்பட்டுள்ள பொறுக்கமுடியாத 'தலைவலி' ஏற்படாமல் இருந் திருக்கும்.

எப்படி அன்பர் ஆச்சாரியாரின் அமைச்சரவை கவிழ்ந்ததற்கு அவருடைய குலதர்மக் கல்வித் திட்டம் காரணமாக இருந்ததோ

அப்படியேதான் சில மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற நகர சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட மாபெருந் தோல்விக்கும் கல்வித் துறையில் காமராஜர் அரசாங்கம் கையாண்டு வரும் பொருத்தமற்ற கல்விக் கொள்கைகளே முக்கியமான காரணமாக அமைந்தன.

அன்பர் காமராஜருடைய அமைச்சரவை ஏற்பட்டு, அதில் கனம் சுப்பிரமண்யம் கல்வி அமைச்சராக இருக்கத் தொடங்கியதிலிருந்து தனியார் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கும், அப் பள்ளிகளில் பணியாற்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அடுக்கடுக்காகத் தொல்லைகள் ஏற்பட்டபடி இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னால், காமராஜ் அமைச்சரவை, மாதம் நூறு ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கெல்லாம் எட்டாவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்கிற திட்டத்தைக் கொண்டு வந்தபோது, அந்தத் திட்டத்தின் காரணமாகத் தனியார் பள்ளிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் முழுவதையும் ஈடுகட்டித் தராமல், ஏற்பட்ட நஷ்டத்தில் நான்கில் ஒரு பகுதியை மட்டுமே ஈடுகட்டித்தர முன்வந்தனர். இந்தப் பொருத்தமற்ற கொள்கை காரணமாகத் தனியார் பள்ளி நிர்வாகிகளின் வருமானம் நான்கில் ஒரு பங்காகக் குறைந்து, பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்கிற நெருக்கடிக்கு அவர்கள் ஆளாயினர்.

சில மாதங்களுக்கு முன்னால் அரசாங்க உதவி பெறும் பள்ளிகள்—உதவி பெறாத பள்ளிகள் என்று ஆரம்பப் பள்ளிகளை இரண்டு வகையாகப் பிரித்து அரசாங்கத்தார் வெளியிட்ட ஓர் உத்தரவின் காரணமாக, மேலே குறிப்பிட்ட குறைந்த அளவு நஷ்டஈடு கூடக் கிடைக்காமல் போய், தனியார் பள்ளி நிர்வாகிகள், தங்கள் பள்ளிக் கூடங்களை நடத்துவதற்குத் தேவையான வருமானமின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஓர் ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்று இருந்து வந்த விகிதத்தை மாற்றி, ஓர் ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்கிற புதிய விகிதத்தைக் கொண்டு வந்ததால், ஆரம்ப ஆசிரியர்களின் வேலைப் பளு அவர்களால் தாங்கமுடியாத அளவுக்கு வளர்ந்துபோய், உள்ளமும் உடலும் சோர்ந்து கிடக்கின்றனர் அவர்கள்.

ஆசிரியர்களின் ஊதியத்தை மணியார்டர் மூலம் நேரடியாகத் தருவது என்கிற ஏற்பாட்டால், ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இத்தனை ஆண்டுகளாக இருந்து வந்த நல்லுறவு குலைந்து, ஆசிரியர்கள் மீது நிர்வாகிகளுக்கு எத்தகைய அதிகாரமும் இல்லாமல், கல்வியின் தரம் கீழே இறக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றன்பின் ஒன்றாகப் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவுகளா லும், இவை போன்ற பிற பல உத்தரவுகளாலும், மட்டற்ற மன வேதனைக்கும் பொறுக்கமுடியாத துயரத்துக்கும் ஆளாகிவிட்ட தனி யார் பள்ளி நிர்வாகிகளும் ஆரம்ப ஆசிரியர்களும், இத்தகைய நிலைக் குத் தங்களை ஆளாக்கிய ஆளும் கட்சியின் மீது வெறுப்புணர்ச்சி கொண்டு அந்தக் கட்சியின் அபேட்சகர்களை எதிர்த்து நகரசபைத் தேர்தல்களில் பணியாற்றி இருக்கின்றனர் என்று நாம் கேள்விப்படு கிறோம். குறிப்பாகவும் சிறப்பாகவும், சென்னை நகராட்சி மன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மாபெருந் தோல்வி ஏற்பட்டதற்கு, தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ஆளும் கட்சியின் கல்விக் கொள்கை கள் பற்றி ஏற்பட்டுள்ள அதிருப்தியும் வெறுப்புமே தலையாய காரணங்களாகும்.

கேரளத்தில் பொதுவுடமை அமைச்சரவை அடைந்த வீழ்ச்சி, தமிழகத்தில் இராசகோபால ஆச்சாரியாரின் அமைச்சரவை திடீ ரென்று கவிழ்ந்துபோன நிகழ்ச்சி, அண்மையில் நகரசபைத் தேர்தல் களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி—இம் மூன்றிற்கும் காரணங்கள் பல உண்டு. உண்மைதான். ஆனால் அக் காரணங் களில் மிக முக்கியமானது, அமைச்சரவையினர், கல்வித் துறையில், அவசர அவசரமாகத் தலையிட்டு, அனாவசியமான மன எரிச்சலையும் வெறுப்புணர்ச்சியையும் உருவாக்கியதுதான் ஆகும்.

பொதுவாக இந்த மூன்று நிகழ்ச்சிகளிலிருந்தும், சிறப்பாகக் கேரள நிகழ்ச்சியிலிருந்தும், சென்னை அரசாங்கத்தார் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உண்டு.

ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தனியார் பள்ளிகளின் நடைமுறையில் அரசாங்கத்தார், தேவை யில்லாத நேரங்களில் தலையிட்டு, அவசியமில்லாத சங்கடங்களை ஏற்படுத்தி, நேர்மையில்லாத திட்டங்களை உருவாக்கினால், அதன் விளைவு விபரீதமாக இருக்கும் என்பது மட்டுமல்ல, அமைச்சரவை யின் வீழ்ச்சியையும் வரவழைத்துவிடும் என்பதே அந்தப் பாடம்.

இந்த உண்மையை மிக அழகாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக்காட்டி, 4—8—59 அன்று, தரங்கம்பாடி பிஷப் மறைத் திரு ஆர். பி. மாணிக்கம் அவர்கள், சென்னை அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

“கேரள அமைச்சரவையின் வீழ்ச்சிக்குத் தலையாய காரண மாக இருந்தது அதனால் நிறைவேற்றப்பட்ட கல்விச் சட்டமே என்கிற பாடத்தை நினைவில் நிறுத்தி, இனியேனும் சென்னை அர சாங்கத்தார், கல்வித்துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்

போது மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, தரங்கம்பாடி பிஷப் அவர்கள், திருச்சி புத்தூர் பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளியின் 25-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கியபோது தெரிவித்திருக்கிறார்கள்.

தரங்கம்பாடி பிஷப் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள இந்த அபாய எச்சரிக்கையை—கேரள அமைச்சரவையின் வீழ்ச்சியிலிருந்து கிடைக்கும் அரிய பாடத்தைச் சென்னை அரசாங்கத்தார், அழுத்தந் திருத்தமான முறையிலும் திட்டவட்டமான வகையிலும் தங்களுடைய உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்டு, இனியாகிலும், கல்வித் துறையில் வீண் குழப்பங்களை உருவாக்காமல் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

கல்வித் துறைக் கொள்கை

சென்னை அரசாங்கத்துக்குப் பிஷப்பின் எச்சரிக்கை

திருச்சி ஆக. 2

திருச்சி புத்தூர் பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளியின் 25-வது ஆண்டு நிறைவு விழா ஆகஸ்ட் முதல் தேதியன்று கார்ட்னர் மண்டபத்தில் நடைபெற்றபோது, அவ் விழாவிற்குத் தலைமை தாங்கிய தரங்கம்பாடி பிஷப்—ரைட்ரெவரண்ட்—ஆர். பி. மாணிக்கம் அவர்கள், தம் தலைமையுரையில், கேரள அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குத் தலையாய காரணமாயிருந்தது கேரளக் கல்விச் சட்டமே என்கிற பாடத்தை நினைவில் நிறுத்திக்கொண்டு, சென்னை அரசாங்கத்தார், கல்வித் துறைச் சீர்திருத்தங்களில் "மிக ஜாக்கிரதையாக" இருக்கவேண்டுமென்று எச்சரிக்கை செய்தார். கிறித்தவக் கோயில்களாலும் அறநிலையங்களாலும் நடத்தப்படும் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் கிறித்தவ வாழ்க்கை முறையில் நம்பிக்கை உள்ளவர்களாக இருத்தல் இன்றியமையாதது என்றும், இந் நிலையில் கிறித்தவப் பள்ளிகள் கல்வித் துறையில் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமானல், அப் பள்ளிக்கூடங்களுக்கு எந்த வகை ஆசிரியர்களிடம் நம்பிக்கை இருக்கிறதோ அந்த ஆசிரியர்களையே வேலையில் அமர்த்திக்கொள்ளும் உரிமை இருந்தாகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ஆசிரியர்

களின் ஊதியத்தை மணியார்டர் மூலம் நேரடியாகத் தருவது என்கிற அரசாங்கத்தின் புதிய உத்தரவால் ஆசிரியர்கள்—நிர்வாகிகள்—இரண்டு சாராருக்குமே இடையூறுகள் ஏற்பட்டுள்ளன என்றும், அந்த உத்தரவின் காரணமாக, ஜூன் மாதத்திற்குரிய ஊதியத்தை ஆண்டுவிழா நடைபெறுகிற அன்றைய தினம் வரையில்கூட (ஆகஸ்டு 1) பெறாமல் பல ஆசிரியர்கள் உள்ளனர் என்பது தனக்குத் தெரியும் என்றும், கிறித்தவ அறநிலையங்கள் ஆசிரியர்களின் ஊதியங்களை உரிய காலத்தில் தருவதிலிருந்து எப்போதும் பிறழ்ந்ததில்லை என்றும், ஆதலால் இந்தப் புதிய உத்தரவிலிருந்து அந்த நிலையங்களுக்கு மட்டுமாவது விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசுகையில், அவர், கல்வி இலாகாவிலிருந்து இப்போதெல்லாம் கிடைக்கின்ற மிக ஏராளமான சுற்றறிக்கைகளையும் அறிவிப்புகளையும் கண்டால் குழப்பமும் மயக்கமுமே உண்டாகின்றன என்று இயம்பினார். கல்வித் துறையின் மீது ஆதிக்கம் செலுத்த முனைகிற அரசாங்கத்தார், அப்படி முனைகிறபோது, இந்திய அரசியல் திட்டத்தின் 30 வது விதியின் முதல் இரண்டு உட் பிரிவுகளின்படி இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமையைப் பாதிக்காதபடி நடந்துகொள்ள வேண்டுமென்றும், சிறு பான்மைச் சமூகத்தவராகிய தங்களுக்கு அந்த உரிமை மிக முக்கியமானது என்றும், அந்த உரிமையை மறுக்க எழுகின்ற எந்த முயற்சியும் கேரள மாநிலத்தில் எந்தக் கதியை அடைந்ததோ அதே கதியைத்தான் அடையும் என்றும், ஆகவே கல்வியைத் திருத்தியமைக்கின்ற அவர்களுடைய ஆர்வத்தில் சென்னை அரசாங்கத்தார் மிக விழிப்பாக இருக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். ஆரம்பப் பள்ளிகளைக் கட்டணம் வாங்கும் பள்ளிகள் என்றும், கட்டணம் வாங்காத பள்ளிகள் என்றும் இரண்டு வகையாகப் பிரித்து அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட உத்தரவையும் அவர் கண்டித்துப் பேசினார். அந்த உத்தரவால் மிகச் சிக்கலான ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய குழந்தையைத் தனக்குப் பிடித்தமான பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப உரிமை உண்டு என்றும், ஆனால் ஏற்கெனவே என். ஜி. ஓக்கள், புதிய உத்திரவால், தங்கள் பிள்ளைகளைக் கட்டணம் வாங்காத பள்ளிகளுக்கே அனுப்பவேண்டிய மறைமுகக் கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகக் குறை கூறுகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார்.

—"ஹிந்து" 4–8–59

சென்னை ஜில்லா எய்டெட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

19-8-59 மாலை 5 மணிக்கு ௸ சங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. ஏ. கே. எஸ். சர்மா அவர்கள் தலைமையில் கூடிற்று. கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

1. நேரடியாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் முறை (Direct payment) நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டிருந்த உறவைக் குலைத்து வருவதாலும், அதனால், பாடசாலையின் நிர்வாகம் திறம்பட நடக்க பாதகம் ஏற்படுவதாலும், ஆசிரியர் சம்பளங்களில் மணியார்டர் கமிஷன் (Moneyorder Commission) பிடித்தம் செய்வதால் ஆசிரியர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதாலும், இந்த (Direct Payment) முறையை உடனே ரத்து செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

2. சம்பளம் வசூலிக்காத பாடசாலைகளுக்குக் கட்டிட வாடகைக்காகவும், ஆசிரியர்களுக்கு (Provident Fund) கட்டவும் மற்ற செலவுகளுக்கும் மாதாந்திரம் நிர்வாக கிராண்டையும், வாடகையையும் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

3. இந்தத் தீர்மானங்களை வைத்துக்கொண்டு கல்வி அமைச்சரையும், முதல் அமைச்சர் அவர்களையும், கல்வி இலாகா டைரக்டர் அவர்களையும் பேட்டி காணும்படி கீழ்க்கண்ட குழுவை இச்சங்கம் அமைக்கிறது.

(1) திரு. ஏ. ஆர். சேஷாசலம்.
(2) ,, ஏ. கே. எஸ். சர்மா,
(3) ,, பி. வீராராகவன்.
(4) ,, சுந்தரமூர்த்தி.
(5) ,, ஜி. இ. அப்பன்.

ஏ. ஆர். சேஷாசலம்,
தலைவர்

பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை

தமிழகம் பெற்ற பெறற்கரிய கருவூலமாய்—அல்லும் பகலும் கல்விப் பணி புரிந்த அற்புதத் தொண்டராய்—மாணவர் சமுதாயத்தின் மாண்புமிக்க வழிகாட்டியாய்—ஆசிரியப் பெருமக்களின் அரும் பெருந் தலைவராய்—தனக்கென வாழாத பிறர்க்குரியாளராய்ப் பேரொளி வீசித் திகழ்ந்த பேராசிரியர்—அறிஞரேறு—அன்பு உருவம் ம. கி. சண்முகனர் அவர்கள் 29—7—59 காலை 5–30 மணி அளவில் இயற்கை எய்தினர் என்ற செய்தி தமிழகம் முழுவதையும் சோக வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது.

அந்தப் பேரறிஞரின் பிரிவால், தாயை இழந்த கன்று போல் தத்தளிக்கிறது சென்னைத் தியாகராயர் கல்லூரி; மகனை இழந்த அன்னை போல் மனம் துடித்துக் கிடக்கிறது தமிழகம்; தளபதியை இழந்த பட்டாளம் போல் செய்வகை தெரியாது சிந்தை குலைந்து நிற்கிறது மாணவர் உலகம்; உயிரை இழந்த உடலம் போல் செயலற்று நிற்கின்றனர் ஆசிரிய மக்கள்.

கல்வித் துறையின் வளர்ச்சிக்காகவும் செழிப்புக்காகவும் பேராசிரியர் சண்முகனர் ஆற்றியுள்ள தொண்டு ஈடு இணையற்றதாகும். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய அவர், அதன் பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், அதற்கும் பின்னர் விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியிலும், சென்ற பத்தாண்டுகளாகச் சென்னை தியாகராயர் கல்லூரியிலும் முறையே ஆங்கில விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் வீற்றிருந்து நாடும் ஏடும் ஒருங்கே புகழும் வண்ணம் நற்றொண்டு ஆற்றி வந்தார்.

ஒரு நல்லாசிரியருக்கு இருக்கவேண்டிய இலக்கணங்கள் அத்தனையும் நிரம்பப் பெற்றவர் பேராசிரியர் சண்முகனர். அவருடைய வகுப்பு எப்போது வரும் வரும் என்றுதான் மாணவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர் வகுப்புக்கு வந்து, நாற்காலியில் அமர்ந்து, சேக்ஷ்பியரின் நாடகப் பகுதிகளை, அவருடைய அந்த அழகிய இனிய கம்பீரமான குரலால் விளக்கத் தொடங்கியதும், மாணவர்களின் உள்ளம் முழுவதும் அந்த விளக்கவுரையின் எழிலிலும் இனிமையிலுமே தோய்ந்து நிற்கும். மாணவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமர் அவர் என்று கூறினல், அது எழுத்துக்கு எழுத்து உண்மையாகும். சேக்ஷ்பியரின் நாடகங்களில்

அவருக்கு இணையற்ற புலமையும் ஒப்பற்ற ஆர்வமும் இருந்தன என்பது நாடறிந்த உண்மை.

சென்னைத் தியாகராயர் கல்லூரி தொடங்கப்பட்டு அதன் முதல்வராக அவர் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் அந்தப் பேராசிரியருடைய ஆங்கிலப் புலமையும் செந்தமிழ்ப் பற்றும் பொதுப்பணி ஆர்வமும் கல்வித் துறைத் தொண்டும் தென்னாடு முழுவதும் ஒளி வீசித் திகழலாயின. அதற்கு முன்னால் குடத்தில் இட்ட விளக்குப் போல் பெரும்பாலோரால் அறியப்படாமல் இருந்தன அவருடைய அறிவும் ஆற்றலும் அரும்பெரும் பண்புகளும்! ஆனால் அதற்குப் பின்னரோ குன்றின் மேல் இட்ட தீபம் போல் நாடு முழுவதும் அப்பண்புகளை அறிந்து போற்றும் அரிய நிலை பிறந்தது.

தென்னாட்டுக் கல்வி உலகத்தில் சென்னைத் தியாகராயர் கல்லூரிக்கு இன்றைய் தினம் சீரும் சிறப்பும் மிக்கதோர் இடம் இருக்கிறது என்றால் அந்தப் பெருமை முழுவதும் பேராசிரியர் சண்முகனாரின் ஓயாத உழைப்பால் கிடைத்த நற்பயன் என்பதை எவரும் மறுத்தல் இயலாது. அந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காக மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, அலைந்து திரிந்து அவர் ஆற்றி வந்த அரும் பெருந் தொண்டை—அந்தத் தொண்டின் சிறப்பை—அந்தச் சிறப்பால் விளைந்த கல்விச் செழுமையை யார்தான் மறக்க முடியும்?

தியாகராயர் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக மட்டும் அவருடைய உழைப்பு செலவிடப்படவில்லை. சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளி, காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரி முதலிய வேறு எத்தனையோ கல்வி நிலையங்களோடும் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டு நற்பணி புரிந்து வந்தார். கல்வி நிலையங்கள் மட்டுமல்லாமல் வேறு பற்பல பொதுநல மன்றங்கள்—கழகங்கள்—அமைப்புகளும் அவருடைய அறிவையும் ஆற்றலையும் அருந்துணையாகப் பெற்று சிறந்து ஓங்கி உயர்ந்து வளர்ந்து பொலிவுற்றிருக்கின்றன. சென்னை மாணவர் மன்றம், நக்கீரர் கழகம், ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம், கல்லூரி மாணவர்கள் சமுதாயத் தொண்டு மன்றம், முதலிய பற்பல அமைப்புகள் அவருடைய நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுச் சிறப்புற்றன.

பிறர் வாழ்வதற்காகவே தான் வாழ்ந்த பெருந்தகை என்று கூறினால், அந்தக் கூற்று, பேராசிரியர் சண்முகத்துக்கு நூற்றுக்கு நூறும் பொருந்தும். அவரிடம் உதவியை நாடிச் சென்றவர்கட்கு இல்லையென்று கூறாது இன்முகத்துடன் இயன்ற வகையெல்லாம் இனிய துணை புரிந்திருக்கிறார். உதவியென்று கேட்டு அவரை நாடி

வந்தவர்கட்கு அவர் உதவி புரிந்தது கூடப் பெரிது அன்று. பற்பல சமயங்களில் அவரே தக்கார் பலரைத் தேடிச் சென்று, அவர்கள் கேளாது இருந்தபோதும், தாமாக உதவி புரிந்திருக்கிறார். யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று எண்ணிய இந்தப் பெருந்தன்மையை—தாராள உள்ளத்தை—தலைசிறந்த பண்பாட்டை எவ்வளவுதான் புகழ்ந்தாலும் மிகையாகாது.

எஃகு போன்ற உடல்—அதைவிட உறுதி படைத்த உள்ளம்—கம்பீரமான தோற்றம்—களை பொருந்திய முகம்—கனிவு ததும்பும் சொற்கள்—இனிமை தவழும் பண்பாடு—இத்தனையும் படைத்தவர்—ஒப்பற்ற கல்வித் தொண்டர்—தென்னகத்தின் பொன்னொளி—பேராசியர் ம. கி. சண்முகனார். அத்தகைய அறிவின் செல்வரைத் தான் தமிழகம் இழந்துவிட்டது. நினைக்கும்போதெல்லாம் நெஞ்சம் பதறுகிறது. தாங்க முடியாத இந்தத் துயரத்தை எப்படித்தான் தாங்குவது — எவ்வாறுதான் பொறுத்துக்கொள்வது — ஏதுமே தெரியவில்லை. மெல்ல நகர்ந்து செல்லும் காலம்தான் நம் உள்ளத்தில் ஏற்பட்டுவிட்ட இந்த ஆறாத துயரத்தை ஆற்ற முடியும். வேறு வழி இல்லை.

(16–ம் பக்கத் தொடர்ச்சி)

உழைப்பை நல்கினார். அது அவருடைய வாழ்நாட்களைக் குறைத்து விட்டது. நாட்டின் அறியாமையைப் போக்கிய பெருந்தகை, தனது ஐம்பத்தொன்றாவது வயதிலே இயற்கையெய்திவிட்டார்!

உத்தமரின் பருவுடல் மறைந்து விட்டது. ஆனால் அவர் வளர்த்த புகழ் அவனி வாழும்வரை நிலைத்து நிற்கும். அதனைத் தான் ஆங்கிலக் கவிஞன் ஷேக்ஸ்பியரின் சாகாத கவிதை வரிகள் நமக்கெல்லாம் நினைவூட்டிக்கொண்டே யுள்ளன......

His life was gentle
The elements so mixed in him
That nature might stand up-
and say to all the world
"This was a man"

—"தென்னகம்"

ஆங்கில நாவலர்—தமிழின் காவலர்

[பி. இராசமாணிக்கம், பி. ஏ.]

29-7-59 புதன்கிழமையன்று சூரியோதயம் அத்தகைய சோகச் செய்தியைச் சுமந்துவரும் என்று படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் போது நான் கருதவில்லை.

மரணம் எங்கள் பேராசிரியரின் உயிரைப் பறித்துக்கொண்டது. பேராசிரியர் ம. கி. சண்முகம் காலமானார் என்ற நெஞ்சுருக்கும் சேதி இன்னமும் என் உள்ளத்திலிருந்து அகலவில்லை அந்த அன்புருவை, உத்தமனை, எங்கள் பேராசானை இனி எப்போது காணப் போகிறோம் அந்தக் கனிவாளரின் திருமுகத்தை, எப்படி மறப்பது? எப்படி மனத்திரையிலிருந்து அழிக்க முடியும்?

மறு நாள் நடைபெற்ற மயான ஊர்வலத்தில் இராணுவ வீரர்கள் போல் இறுதி மரியாதை செலுத்த நடந்துவந்த மாணவர் பட்டாளம், அவர்கள் வாழ்வில் அவர் பெற்றிருந்த இடத்தை அரற்றி அரற்றிக் கூறிக்கொண்டிருந்தது.

அன்று மாணவர் சமுதாயம் ஓர் நல்லாசிரியரை இழந்தது.

நாடு, ஒரு நற்பணியாளரை இழந்தது.

தமிழ், தன் காவலனை இழந்தது.

நீலக்கடல்—அதன் கரையிலே வெண்மை நிறம் காட்டும் மணற் பரப்பு அதில் விளையாட்டுப் பயிலும் மக்கள் கூட்டம்-நெடுஞ்சாலை கள்-மேகம் தழுவிச் செல்லும் உயர்ந்த கட்டிடங்கள்—அழகு கூட்டும் அங்காடிகள் – இவைகளால் மட்டும் சென்னை நகரம் சிறப்புப் பெற வில்லை நகரத்தின் ஏற்றத்திற்குப் பல துறைகளிலிருந்து பணியாற்றும் ஆற்றல் மிக்க அறிஞர் பெருக்களும் சொந்தக்காரர்கள் ஆகிறார் கள். கல்வித் துறையிலே பணியாற்றும் பெரியோர் பலரில், முதல் வராகத் திகழ்ந்தவர் சென்னையம்பதியில் இருக்கும் சர். தியாகராயர் கல்லூரியின் முதல்வர் ம. கி. சண்முகம் அவர்கள் ஆவார்கள். "இவ்வளவு குறைந்த "மார்க்குகளை" வாங்கிய மாணவர்களைக் கல் லூரியில் சேர்த்துக்கொள்கிறீர்களே, அதனால் 'ரிசல்ட்' குறைந்து விடாதா?" என்று கேட்டார் ஆசிரியர் ஒருவர்.

"நல்ல மார்க்குகள் வாங்கியவர்களைச் சேர்த்து, பெருமளவில் என் கல்லூரியில் மாணவர்கள் வெற்றியடைந்துவிட்டார்கள் என்று சொல்லுவதில் பெருமையில்லை, குறைந்த மார்க்குகளை வாங்கியவர் களைக் கொண்டு நல்ல 'ரிசல்ட்' காண்பிப்பதில்தான் பெருமையிருக் கிறது. ஆற்றலும் அறிவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பிறந்து

விடுவதனால் மட்டும் ஏற்படுவதில்லை. அவர்களுக்கு அமைகின்ற சூழ்நிலையே காரணம். அந்த நல்ல சூழ்நிலையை என்னால் என் மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும் என்று நம்புகிறேன். வடசென்னையில் இருப்பவர்கள் பொதுவாக ஏழைகள். அவர்களுடைய வாழ்வில் நல்ல முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்பதுதான் இந்தத் தியாகராயர் கல்லூரியின் இலட்சியமாகும். இனிமையும் ஒளியுமே என் கல்லூரியின் இலட்சினை. அதைப் பரப்புவதே என் பணி'' என்று கம்பீரம் தோன்றக் கூறினார் !

பிள்ளைக்கு அங்கு ஒரு இடம் கிடைக்குமா என்ற துடிப்போடு நின்ற அந்தத் தந்தையின் முகத்தில் அமைதி தோன்றாமல் இல்லை. ஏழை எளியவர்களின் நண்பன் நான் என்று பெருமையோடு கூறிக் கொள்ளும் பெருந்தகையாளர் திரு. ம. கி. சண்முகம் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்ற செய்தி நம்மைத் துடிக்கச் செய்கிறது. ஆறுதல் காணும் வகையறியாது கண்ணீர் வடிக்கிறோம்.

"மரணத்தைக் கண்டு நல்லவர்கள் பயப்படுவதில்லை !"

"அன்றலர்ந்த மலர், வாடாமல் போவதில்லை." "பிறப்பு என்று ஏற்பட்டால் இறப்பு என்று ஒன்றைத் தவிர்க்க முடியாது இது இயற்கை'' என்று எவ்வளவோ தத்துவங்கள் சொல்லப்படுகின்றன. அந்தத் தத்துவங்களிடையே இருக்கும் உண்மை நமக்குப் புரியாமல் இல்லை. கல்லூரியின் தந்தையை இழந்து நிற்கும் மாணவர் சமுதாயத்திற்கு ஆறுதல் அளிக்கும் ஆற்றல் அந்தத் தத்துவங்களுக்குக் கிடையாது ! அங்கேதான் தியாகராயர் கல்லூரின் முதல்வராக இருந்த திரு. ம. கி. சண்முகம் அவர்களின், புகழ் ஒளி வீசுகிறது. அவரது பண்பு ஜொலிக்கிறது !

சில வருடங்களுக்கு முன், "சர். தியாகராயர் கல்லூரியில் படிக்கிறேன்'' என்று சொன்னால், அப்படியொரு கல்லூரி சென்னையில் இருக்கிறதா ? என்று வியப்போடு என்னைக் கேட்டிருக்கிறார்கள் ! ஆனால் இன்று? அந்தக் கல்லூரியிலே படிப்பதினாலேயே, ஒரு தனிப் பெருமை மாணவர்களுக்கு உண்டு என்ற உண்மை, தமிழகமெங்கும் நிலவியிருக்கிறது என்பதை, அக்கல்லூரியிலே படித்த என்னால் உணர முடிகிறது !

நாட்டு மக்களின் உள்ளத்தில் நல்ல இடத்தை, இன்று தியாகராயர் கல்லூரி பெற்றிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அதனை நடத்திச் சென்ற திரு. ம. கி. சண்முகம் அவர்களின் அறிவாற்றலும், நல்ல ஆர்வமும், தளராத முயற்சியும், குறையாத நம்பிக்கையும் ஆகும் !

பொருளாதாரக் குறைபாட்டினால் கல்லூரியின் வளர்ச்சி தடைபடும்பொழுது திரு சண்முகம் அவர்களின் ஆற்றல், கிடைத்தற்கரிய செல்வமாக இருந்தது. கலைத் துறையிலே ஈடுபாடு கொண்ட நடிகர்களைக் கொண்டு நாடகங்கள் நடத்தி அதன் மூலம் பொருள் ஈட்டியிருக்கிறார் நம் ஒப்பற்ற தலைவர். அறிஞர் அண்ணா அவர்களைத் திரு. சண்முகம் அவர்களின் பெருங்குணம் கவர்ந்தது. அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலையும் எழுத்துத் திறமையையும், கலைப் பணியையும், நாட்டுத் தொண்டினையும் பலமுறை பாராட்டிப் பேசியிருக்கிறார். அறிஞர் அண்ணாவைப்போல் நீங்களும் வளரவேண்டும் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கி யிருக்கிறார்! அறிஞர் அண்ணா அவர்களுக்கு தியாகராயர் கல்லூரியென்றால் தனி மதிப்பு! அதன் வளர்ச்சியிலே அண்ணா அவர்கள் கருத்துள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். தன் "சந்திரமோகன்" என்ற ஒப்பற்ற நாடகத்தின் மூலம் பெரும் அளவிற்குப் பொருள் சேர்த்துத் தந்திருக்கிறார்! தியாகராயர் கல்லூரியில் இருக்கும் ஒவ்வொரு கட்டிடமும், திரு. சண்முகம் அவர்களின் ஒப்பற்ற சாதனையைக் கூறிக் கொண்டுதான் இருக்கும்!

நூல் பல கற்றவர். ஆங்கில மொழியில் "மேதை" என்று தான் சொல்லவேண்டும். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை, மாணவர்களுக்கு இவர் எடுத்துச் சொல்லும் பாங்கு, தனிச் சிறப்புடையது. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சாகாவரம் பெற்றிருப்பது அவரது எழுத்துத்திறத்தால்மட்டுமல்ல. திரு. சண்முகம் போன்ற நல்லாசிரியரின் நாவன்மையால்தான்! ஷேக்ஸ்பியரால் உருவாக்கப்பட்ட பாத்திரங்களின் தன்மைகளை இவர் எடுத்துச் சொல்லும்பொழுது, திரு. சண்முகம் அவர்கள் தன்னை மறந்து பாத்திரங்களோடு ஒன்றிப் போய்விடுவார்கள். வார்த்தைகளால் சொல்லமுடியாத வசீகரம், அவரது ஆங்கிலத்தில் இருக்கும்! நுண்கலைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு உண்டு! நாடகம் அவரது உயிர்! ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் 'சிம்பளின்' என்பது ஒன்று. அதை நாடகத்தில் நடித்துக் காட்டுவது மிகவும் கடினம். இங்கிலாந்திலேயே ஒரு முறைதான் அந்த நாடகத்தை நடித்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த நாடகத்தை மாணவர்களைக் கொண்டு, முதல் காட்சியிலிருந்து கடைசி காட்சிவரை தொய்வில்லாமல், நடித்துக் காட்டவைத்த பெருமையொன்றே அவரது கலை ஆர்வத்துக்கு எடுத்துக் காட்டாகும்.

கல்லூரிகளிலே, பாடங்கள் எல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்ற கொள்கைக்கு ஆதாரங்களை எடுத்துக் காட்டி ஆதரவு தந்ததை, என்றும் நம்மால் மறந்துவிடமுடியாது! தமிழின் சிறப்பை உணர்ந்த அவர், தன் கடைசிக்காலங்களில் அதைக் குறை

யில்லாமல் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். தமிழாசிரியர்களின் துணைக்கொண்டு கற்றுத்தெளிந்தார். மலேயா, சிங்கப்பூர் சென்று, தமிழிலேயே சொற்பொழிவு நடத்தினார். திருக்குறளுக்கு ஒப்பான நூல் ஏதும் இல்லை என்று கூறியிருக்கிறார்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் தியாகராயர் கல்லூரியிலே தமிழ் மன்றத்தின் சார்பில், குடியரசு என்ற தலைப்பில் அண்ணன் சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த திரு. சண்முகம் அவர்கள், கடைசியில் பேசும்பொழுது, "ஆங்கிலத்தில் உள்ள கருத்துக்களை இவ்வளவு அழகாகத் தமிழில் சொல்லமுடியும் என்று நான் நினைக்கவில்லை. தோழர் சம்பத் அவர்கள், ஆசிரியர்களாகிய எங்களுக்கு வாரம் ஒரு முறை ஒவ்வொரு பொருளைப் பற்றிப் பேசிக் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு காலம் தமிழ்மொழியை நல்ல வகையில் கற்றுக் கொள்ளாததற்கு நான் வெட்கப்பட வேண்டும்" என்று உருக்கத்தோடு சொன்ன காட்சியை எப்படி மறந்துவிட முடியும்? வேறுபட்ட கருத்துக் கொண்டவர்களானாலும் அவர்களது அறிவாற்றலைக் கண்டு புகழுரை கூறாமல் இருக்கமாட்டார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் சட்டக் கல்லூரியில் தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆண்டு விழாவிலே அறிஞர் அண்ணா அவர்களும், திரு. சண்முகம் அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களின் பொதுப்பணியை வாய்விட்டுக் கூறிவிட்டு "தமிழகமக்களுக்கு, அண்ணா அவர்கள், கால வெள்ளத்தாலும் அழிக்கமுடியாத நாடகம் ஒன்றை ஆக்கித்தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். "தமிழ்மொழி வளர நல்ல நாடகங்கள், சிறு கதைகள், 'கவிதைகள்' நிறைய உண்டாக்கப்பட வேண்டும். இந்தப்பணியை மாணவர் சமுதாயம் ஏற்றுக்கொண்டு, திறம்பட முடிக்கவேண்டும்; அதுவே என் ஆசை" என்று உருக்கமாகக் கூறி முடித்தார்.

அறிவாற்றல் மிக்கவர்களில் பலர் நல்ல உள்ளம் படைத்தவர்களாக இருப்பதில்லை. நல்ல உள்ளம் படைத்தவர்கள், அறிவாற்றல் மிக்கவர்களாக இருப்பதில்லை. ஆனால் திரு. ம. கி. சண்முகம் அவர்களிடம் இரண்டும் ஒன்றுசேர்ந்து இருக்கக்கண்டேன்!

ஏற்றி வைக்கப்படும் மெழுகுவர்த்தி, ஒளி தருகிறது — இருளைப் போக்குகிறது, தன்னைச் சிறிது சிறிதாக அழித்துக் கொண்டு! சர் தியாகராயர் கல்லூரியின் இலட்சினையான இனிமையையும் ஒளியையும் நாடெங்கும் பரப்பினார். கண் துஞ்சாது பசி நோக்காது

(12–ம் பக்கம் பார்க்க)

அச்சுக் கலை வளர்ந்த கதை

இன்று நாம் பத்திரிகைகளைப் படிக்கிறோம்; அறிஞர்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ளுகிறோம்; ஆழ்ந்த கருத்துக்களும் அழகிய சித்திரங்களுமுள்ள நூல்களைப் படித்து மகிழ்கிறோம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நூல்களைக் கையால் எழுதிப் பிரதி யெடுத்தார்கள்.

பல கலைகள் கீழை நாடுகளில் தோன்றின. அச்சுக் கலையும் கிழக்கே தோன்றி, மேற்கே சென்று வளர்ந்தது. முதல் முதலாக, மரத்தில் செதுக்கிய அச்சுக்களைக் கொண்டு, ஜப்பானியர் புத்தகத் தயாரிப்பில் ஈடுபட்டார்கள்; இது 1,200 ஆண்டுகளுக்கு முந்திய கதை.

நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, சீனர்களும் இந்தப் பணியிலீடுபட்டு, புத்தகங்களை அச்சிட்டார்கள். மூன்றாவது முயற்சி ஜெர்மனியில் தோன்றியது. 1440-ல் கூடன்பர்க் என்பவர், தனித்தனியாக மர அச்சுக்களைத் தயாரித்து, அச்சுத் தொழிலில் ஓர் திருப்பத்தைச் செய்தார். பிற்காலத்தில் உலோக அச்சுக்களைத் தயாரிக்க கூடன்பர்க் முறை வழிகாட்டியாக அமைந்தது. 1462-ல், போர்க் காரணத்தால், மெயின்ஸ் (ஜெர்மனி) நகரம் பாழ்பட்டது. அங்கிருந்த அச்சுக் கலைஞர்கள் நாட்டின் பிற பகுதிகளிலும், பிற நாடுகளிலும் குடியேறினார்கள்.

வில்லியம் காக்ஸ்டன்

வில்லியம் காக்ஸ்டனை, 'பிரிட்டிஷ் அச்சுக் கலையின் தந்தை' என்று வர்ணிப்பதுண்டு. இவர் 1476-ல் லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் பகுதியில் அச்சுக்கூடம் நிறுவினார். ஐரோப்பாவில் முதல் முதலாக, தாய்மொழியில் அச்சிட்ட நூல்களை வெளியிட்ட பெருமை இவரையே சேரும். அந்தக் காலத்தில் லத்தீன் மொழியில் நூல்களை அச்சிடுவதே வழக்கமாக இருந்தது. இவை பெரும்பாலும் சமய நூல்களாகவே இருந்தன. காக்ஸ்டன் ஆங்கில எழுத்து அச்சுக்களைத் தயாரித்து ஆங்கில நூல்களை வெளியிட்டார். 15 ஆண்டுகளில் சுமார் 100 புத்தகங்களைப் பிரசுரம் செய்தார்.

காக்ஸ்டன் காட்டிய வழியில், அச்சுத் தொழில் சில நூற்றாண்டுகளுக்கு இயங்கிற்று; ஆனால், வளர்ச்சி பெறவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில்தான் மீண்டும் ஓர் மாறுதல் ஏற்பட்டது. வில்லியம் காஸ்லன் என்பவர், புதுாக அச்சுக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தினார். அவரைப் பின்பற்றிப் பலர், பல அபிவிருத்திகளைச் செய்தார்கள்; என்றாலும், பத்தொன்பதாம் நூற்

றாண்டு வரையில் சிறந்த முன்னேற்றம் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில், வில்லியம் மாரிஸ் என்பவர், எழுத்துக்களை வகைப்படுத்தி அச்சிட முயன்ற போதுதான் அச்சுத்தொழிலுக்குக் கலை அம்சம் ஏற்பட்டது.

பத்திரிகைகள்

இடைக்காலத்தில் பத்திரிகைகள் தோன்றி வளரலாயின. அச்சுத்துறையில் புதுமைகாணும் அவசியம் ஏற்பட்டது. இயந்திர உதவியால், விரைவில் அச்சடித்தால்தான் பத்திரிகைகளால் ஏற்படும் பயனைப் பெறமுடியும். வில்லியம் கெட் என்பவர், பக்கத்திற்கு ஒரு பலகையாக (ஸ்டீரியோ) அச்சுக்களை வார்க்கும் முறையைக் கண்டுபிடித்தார். இது 1725-ல் நடந்தது. ஆனால் இதை எழுத்துக் கோப்பவர்கள் எதிர்த்தார்கள்; மற்றவர்கள் ஆதரவு தரவில்லை. வில்லியம் கெட் லண்டனுக்குச் சென்றார். அங்கும் எதிர்ப்புத் தோன்றியது. ஆயினும், பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆதரவு கிடைத்தது.

ஜான் பாக்ஸ்டர் என்ற ஆங்கிலேயர், மை தடவும் உருளையைக் கண்டுபிடித்தார். 1811-ம் ஆண்டில் இங்கிலாந்தில் குடியேறிய கோனிக் என்ற ஜெர்மானியர் விசையால் இயங்கும் அச்சு இயந்திரத்தைத் தயாரித்தார்; அந்த இயந்திரத்தை 1814-ல் 'டைம்ஸ்' அச்சகத்தில் நிறுவினார்கள். இதைத் தொடர்ந்து பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. பிற்காலத்தில் அச்சு இயந்திரங்களைத் தயாரிப்பதில் பலர் ஈடுபட்டார்கள். 1860-ல் கட்டப்பட்ட 'வார்ஸ்டேல்' இயந்திரம் பிரபலமடைந்தது. ஆயினும் பத்திரிகைகளின் தேவை நிறைவு பெறவில்லை. துரிதமாக இயங்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிப்பதில் பலருடைய கவனம் திரும்பிற்று.

லண்டன் 'டைம்ஸி'ல் பணியாற்றிய ஜான் வால்டர், 1865-ல் 'ஸ்டீரியோ'வை வளைத்து உருளையாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். 1885-ம் ஆண்டில் 'லைனோடைப்' இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், வரி வரியாக அச்சுக் கோப்பது சாத்தியமாயிற்று; வேலையும் துரிதமாக நடந்தது. இதைத் தொடர்ந்து, எழுத்து எழுத்தாக வார்த்துக் கோக்கும் 'மோனோடைப்' இயந்திரம் வந்தது. இந்த இயந்திரங்களை அபிவிருத்தி செய்ததால் அச்சுக் கலையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது.

காக்ஸ்டன் காலத்தில் எழுத்து எழுத்தாகப் பொறுக்கி, பக்கம் செய்து, கையால் மை தடவி, காகிதம் வைத்து அழுத்தும் நிலை இருந்தது; இதனால், ஒரு புத்தகத்தை அச்சிடப் பல மாதங்களாயின.

இன்றுள்ள நிலை வேறு. எழுத்துக்களைக் கோக்க இயந்திரம், இசை சேர்க்க இயந்திரம், காகித உருளையைச் சுற்ற இயந்திரம் எனப் பல உண்டு. 16 முதல் 32

(அடுத்த பக்கம் பார்க்க)

பழங்களின் பெருமை

பழ வர்க்கங்கள் மானிடர் ஆரோக்கியத்திற்காகச் சமயா சமயங்களில் சாப்பிடும் பண்டங்கள் என்றும், அவைகள் அவ்வளவு சத்துள்ள உணவு அல்ல என்றும் அநேகர் எண்ணுகிறார்கள். சிறுவர்கள் பலகாரம் கேட்டு, கொடாவிட்டால் அழுகிறார்கள். பெற்றோர் தித்திப்புப் பண்டத்திற்காக அழும் குழந்தையின் இயற்கை ஆசையைத் திருப்தி செய்யும் படியாக, அக் குழந்தைகளுக்குக் கற்கண்டு, மிட்டாய், பணியாரம், பிஸ்கோத்து முதலிய பல வகைத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். இவைகள் செயற்கைச் சுவை உணவுகள். இவைகள் பழ வர்க்கங்களைப் போல் சத்துள்ளவைகள் அல்ல.

சர்க்கரை அவ்வளவு நல்லதல்ல. சர்க்கரைக்கும் பழத்திலுள்ள இனிப்புக்கும் பெரிய பேதம் உண்டு. பழச் சர்க்கரை வயிற்றில் சென்ற உடனேயே உறிஞ்சப்படும் தன்மை உடையதாயிருக்கிறது. ஆனால் மற்றச் சர்க்கரையோ சரீரச் செல்லுகளால் உறிஞ்சப்படுவதற்கு முன்பு பழச் சர்க்கரையாக மாற்றப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த மாற்றம் அது சிறு குடல்களில் போய்ச் சேரும் வரையில் நடைபெறுகிறது.

சாதாரணமாய்ச் சாப்பிடும் ஆகாரத்தில் சர்க்கரை சேர்ந்திருக்குமாயின், அது வயிற்றுக்குள் சென்ற உடனே ஆகாரத்தைப் புளிக்கச் செய்கின்றது. இதனால் நமைச்சல் செய்யும் ஒரு வித திராவகம் உண்டாகி, வயிற்றுக்குக் கேடு செய்கிறது. ஆகையால் சர்க்கரை அதிகமாய் உபயோகிக்கும் பழக்கத்தை நிறுத்திப் போட்டு, சிறுவர்கள் இனிப்புப் பண்டங்களுக்காக அழும் போது, கூடிய மட்டும் அவர்களுக்குத் திராட்சை, மா, வாழை, பேரீச்சை முதலிய மதுர பழங்களைக் கொடுப்பது மிகவும் நல்லது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பக்கங்களுள்ள பத்திரிகையை மணிக்கு 60,000 பிரதிகள் அச்சடித்து, எண்ணிக் கட்டித் தரும் இயந்திரங்கள் உண்டு.

'ஹோ அண்டு கிராப்ட்' நிறுவனம் தயாரிக்கும் அச்சு இயந்திரங்கள் மின் விசையால் இயங்குகின்றன. ஒருபுறம் காகிதத்தைக் கொடுத்தால், மறுபுறம் பத்திரிகைக் கட்டுக்களை வழங்குகின்றன. இவற்றின் உதவியால் உலகின் பல பகுதிச் செய்திகளை சில மணி நேரத்தில் படித்துத் தெரிந்து கொள்ள முடிகிறது.

கிழக்கே தோன்றிய அச்சுக் கலை மேற்கே வளர்ந்தது. சென்ற நூறு ஆண்டுகளில்தான் சிறப்பாக முன்னேறி வாழ்க்கைக்கு இன்றியமையாத் தொழிலாயிற்று.

—"நம் நாடு"

பழங்களைச் சாப்பாட்டோடு, அல்லது சாப்பாடு முடிந்தவுடன் அருந்துவது நல்லது. பழத்தில் உள்ள புளிப்புத் திராவகம் சாப்பிட்ட ஆகாரம் சீரணமாக உதவி புரிகின்றது. மந்த சீரணம் உடையவர்கள் ஆகாரத்திற்குப் பின்பு வாழைப்பழம், ஆரஞ்சு, அன்னாசி முதலியவை சாப்பிடு வார்களாயின், சீரணம் சீக்கிரம் நடைபெறும். பழங்கள் வயிற்றுள் சென்ற ஆகாரம் அழுகி நச்சுத் தன்மை அடையச் செய்யும் விஷக் கிருமிகள் உண்டாகாதபடி தடுக்கின்றன.

கப்பலில் நெடு நாள் பிரயாணம் செய்யும் மாலுமிகள் பழங்கள், புதுக் காய்கறிகள் கிடையாமல் மாமிசம், வெண்ணெய், ரொட்டி, சீனி, தேயிலை, காப்பி முதலியவைகளையே சாப்பிட்டு வந்ததனால் வியாதிப்பட்டனர் என்று பன்முறையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இந்த ஆகாரத்தையே இன்னும் கொஞ்ச நாட்களுக்கு உபயோகித்துக்கொண்டு வருவார்களாயின், அவர்கள் ஈறுகள் பஞ்சு போல் மெதுவடைய ஆரம்பிக்கும். சொறி கரப்பான் என்னும் வியாதியும் அவர்களிடம் உண்டாக ஆரம்பிக்கும். ஆனால் ஏராளமான பழம் சாப்பிடத் துவங்கினால், இந்தச் சொறிகரப்பான் தானாக மறைந்துபோம். பழத்தில் உள்ள புளிப்புத் திராவகம் தடுக்கப்பட்டுச் சரீரத்திற்கு உஷ்ணமும் சக்தியும் கொடுக்கிறது. அதில் ஏராளமாய் உள்ள மாவுப் பொருள் இரத்தம், யூரிக் ஆசிட், இன்னும் மற்றத் திராவகங்களையும் சுத்தி செய்து, அவைகளில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியாக்கிவிடுவதனால் வாதம், சந்து வாதம் முதலிய வியாதிகள் வராதபடி தடுக்கப்படுகின்றன.

பழச்சாறும் மாமிசரசமும் எவ்வளவு சத்துப் பொருட்கள் கொண்டன என்றால், ஒரு கோப்பை ஆரஞ்சுப் பழ ரசத்தில் ஐந்து கோப்பை மாமிச ரசத்தில் உள்ள சத்துப்பொருள் அடங்கியிருக்கிறது. ஒரு கோப்பை திராட்சைப் பழ ரசம் எட்டுக் கோப்பை மாமிச ரசத்துக்குச் சரி. அநேக வியாதிகளில், விசேஷமாய்க் காய்ச்சல் அடிக்கும் போது, காஸ்ட்ரிக் திராவகம் வெகு கொஞ்சமாகச் சுரப்பதால் சீரணம் மெதுவாக நடைபெறுகிறது, அல்லது முழுவதுமாய்த் தடைப்படுகிறது. ஏற்ற அளவான திராவகம் இல்லாவிட்டால், ஆகாரம் கெட ஆரம்பிக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் மாமிசரசம் கொடுக்கப்படுமாயின், இரைப்பையில் விஷப் பொருள் பெருகி, காய்ச்சல் அதிகரிக்கின்றது.

ஆனால் பழ ரசமோ வியாதிக் கிருமிகளையும் விஷக் கிருமிகளையும் கொல்லுகின்றது. கொஞ்ச அளவான திராட்சைப்பழச் சாறு, அதாவது, 99 பங்குத் தண்ணீரும் ஒரு பங்கு திராட்சைப்பழ

(26-ம் பக்கம் பார்க்க)

அலுமினியமும் அதன் அற்புதக் கதையும்

[பி. கோதண்டராமன்]

[அலுமினிய உற்பத்திக்கு இன்றியமையாத பாக்ஸைட் உலோகக கனிகள் சேலத்தில் சேர்வராய மலைப் பிரதேசத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன என்றும், அக் கனிகளில் போதிய அளவு அலுமினியம் உள்ளது என்றும் பத்து அல்லது பன்னிரண்டு கோடி ரூபாய் செலவில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று சேலத்தில் அமைகக முயற்சிகள் நடந்து வருகின்றன என்றும், இதிலிருந்து 10,000 டன் அலுமினியம் உற்பத்தியாகுமென்றும் சமீபததில் தொழில் அமைச்சர் திரு. வெங்கடராமன் அறிவித்தார். இந்த நிலையில் அலுமினியத்தைப் பற்றிய இக் கட்டுரை வாசகர்களுக்குச் சுவையளிக்குமெனக் கருதுகிறோம்.

— ஆசிரியர்]

அலுமினியம் சிறிது நீலம் கலந்த ஓர் உலோகமாகும். அது பூமியில் தனித்த நிலையில் அகப்படுவதன்று. கற்பாறை, களிமண் கட்டி ஆகியவற்றுடனும் இதர உலோகங்களுடனும் கலந்திருப்பதொன்று. சிலிக்கன் என்னும் உலோகப் பொருளுக்கும் பிராணவாயுவுக்கும் அடுத்தபடியாக இது பூமியில் ஏராளமாகக் கிடைக்கிறது. பூமியில் பதிந்துள்ள சற்றேறக்குறைய எல்லாப் பொருள்களிலுமே இது எட்டு சதவீதம் கலந்துள்ளது. உலோகங்களில் மூன்றில் ஒரு பங்காக உள்ளது இதை மற்றப்பொருள்களிலிருந்து தனியாகப் பிரித்தெடுப்பது எளிதான காரியமன்று. அதனாலேயே, இது வெகுகாலம் சிறிதளவே கிடைத்து வந்தது. பெருஞ்செலவில் சொற்பமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்த இது, பொருட்காட்சிகளில் அபூர்வமானதொரு பொருளாக வைக்கப்பட்டது.

பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்டது

சமீப காலமாகத்தான் இது பாக்ஸைட் என்னும் தாதுப்பொருளினின்றும், பெறப்பட்டு வருகிறது. இந்த பாக்ஸைட்டில் ஐந்தில் ஒரு பங்குமுதல் இரண்டு பங்கு வரையில் அலுமினியம் அடங்கியுள்ளது. இந்தக் தாது முதன் முதலாகத் தென்பிரான்ஸில் லெபாக்ஸ் என்னும் ஊரில் கண்டு பிடிக்கப்பட்டது. ஆகையால், இது பாக்ஸைட் என்னும் பெயர் பெறலாயிற்று. இது இப்

போது பிரான்ஸில் மட்டுமின்றி, அமெரிக்க ஐக்கிய நாடு, ஹங்கேரி, முதலிய இடங்களில் பூமிக்குள் சிறிது ஆழமாயும் தென்னமரிக்காவைச் சார்ந்த பிரிட்டிஷ் கயானா, ஆபிரிக்கா, இந்தியாவிலுள்ள காஷ்மீரம், மத்தியப் பிரதேசம், சென்னை, பம்பாய் ஆகிய ராஜ்யங்களில் பூமியின் மேல் மட்டத்திலும் கிடைக்கின்றது. சற்றேறக்குறைய 70 வருஷங்களுக்குமுன் உலக முழுவதிலுமே இதன் வருடாந்திர உற்பத்தி 40 டன்னுக்குக் குறைவாக இருந்தது. விஞ்ஞானிகளின் முயற்சியால் உற்பத்தி மேன்மேலும் பெருகி வந்து, சென்ற மகாயுத்தத்திற்குப் பின் 30 லட்சம் டன் முதல் 40 லட்சம் டன் வரையில் கிடைத்து வந்தது. நம் இந்தியாவில் 1952-ல் 3566 டன் கிடைத்ததெனத் தெரிகிறது. இன்று கனடாவிலும் பிரிட்டனில் ஸ்காத்லாந்திலும், வேல்ஸிலும் ஜலமின்சார வசதியுள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் இவ்வற்புத உலோகம் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

உலோகச் சிறப்பு

அலுமினியம் மிக இலேசான உலோகம். இதன் பிரதான சிறப்பு இதுவே. இதன் கனம் எஃகை விட மூன்று மடங்கு குறைவு. இது துருப்பிடிப்பதில்லை; கறுத்துவிடுவதில்லை; களிம்பேறுவதில்லை; ரசாயனச் சரக்குகள், திராவகங்கள் முதலியவற்றால் கெடுவதில்லை. இது உஷ்ணத்தை எளிதில் ஏற்கிறது. மின்சாரத்தைச் செலுத்தும் சக்தி இதற்கு அதிகமுண்டு. வேறு உலோகங்களை இத்துடன் சொற்பம் கலந்துவிட்டால் போதும், இது எஃகைவிட இரண்டு மடங்கு உறுதியாய்விடுகிறது. இதை ஜெர்மானிய விஞ்ஞானியொருவர் முதன் முதலாகக் கண்டுபிடித்தார். அவர் 200 பங்கு அலுமினியத்துடன் 7 பங்கு செம்பும் 1 பங்கு மக்னீஷியமும் கலந்து காய்ச்சி, அது ஆறியபின் மிகவும் உறுதி வாய்ந்த உலோகமொன்று கிடைக்கக் கண்டார். இந்த முறையைப்பின்பற்றி இப்போது, கச்சா அலுமினியத்துடன் பிக்கலை, வெண்கலம், செம்பு மக்னீஷியம், துத்தநாகம், மாங்கனீஸ், எஃகு, சிலிக்கன் போன்ற உலோகங்களைச் சிறிதளவு கலந்து பலவித உறுதிவாய்ந்த கருவிகளையும் பண்டங்களையும் தயாரிக்கின்றனர்.

உபயோகங்கள்

அலுமினியத்தின் பலவித உபயோகங்களைப் பற்றி நாம் அதிகம் கூறத்தேவையில்லை. இன்று இது கொண்டை ஊசி, சீப்பு, ஸ்பூன், கரண்டி, கோப்பை, தட்டு, அடுக்கு பாத்திரம், சமையல் பாத்திரம் முதலியன செய்தல் முதற்கொண்டு பாலங்கள் கட்டுவது வரையில் எண்ணற்ற வகைகளில் பயன்படுகிறது. அலுமினியத்தினால் கல் நகைக் கட்டிட வேலையையும் மலிவான மினுக்கு நகை

களையும், கடிகார உறை போன்ற பொருள்களையும் செய்கின்றனர். உணவுப் பொருள்களைச் சுற்றிக் கட்டும் தகரத்திற்குப் பதிலாகச் சன்னமான அலுமினியத் தகடுகளை உபயோகப்படுத்துகின்றனர். மிகச் சன்னமான தகடுகள் சாமான்களைச் சுற்றும் வெள்ளித் தகடுகள் போல உபயோகப்படுகின்றன. அலுமினியப்பொடி வர்ணத்திலும், ஆகாச வாணம் செய்வதிலும் பயன்படுகிறது. அலுமினியக் கம்பிகளை மின்சாரக் கம்பிகளாகப் பயன்படுத்துகின்றனர். அலுமினியக் கம்பியின் மத்தியில் எஃகுக் கம்பியைச் செலுத்திக் கனமில்லாத, ஆனால் உறுதியான கம்பியாக்கிவிடுகின்றனர். அலுமினியத்திற்குப் பலவித வர்ணச் சாயங்கள் ஏற்றிக் கண்களைப் பறிக்கும்படியான அலங்காரப் பொருள்களைச் செய்கின்றனர். பளபளக்கும் அலுமினியத் தகடுகள் வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் போலப் பயன்படுகின்றன. கலப்பு அலுமினியத்தை இன்று மோட்டார்களையும், ஆகாய விமானங்களையும் கட்டுவதில் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இலேசாயும், உறுதியாயும் உள்ள இவ்வுலோகத்தைப் பயன்படுத்தியே சென்ற மகா யுத்தத்தில் நேசக் கட்சியினர் வெற்றியடைந்தனர். இன்று இவ்வுலோகமின்றி ஆகாயவிமானம் இல்லை. லங்காஸ்டர் வெடி விமானத்தின் வேக அதிர்ச்சியையும் இஞ்சின்களின் பளுவையும், தாங்கும் உறுதி பெற்றுள்ளது இவ்வுலோகம் எனில், இதன் சிறப்பைப் பற்றி மேலும் கூறத் தேவையில்லை. வருங்காலத்தில் வீடு கட்டுவதற்கு மரத்திற்குப் பதிலாக இதையே உபயோகிப்பர். தூண்களும் உத்தரங்களும் இனி இதனாலேயே செய்யப்படும். பலவித சிங்கார வேலைகளுக்கும் இது பயன்படும்.

உற்பத்தி முறை கண்டு பிடித்தவர்

அலுமினியத்தின் இத்தனைச் சிறப்புக்கும் காரணமாயிருந்தவர்கள் விஞ்ஞானிகளே என்பதை நாம் மறந்துவிடலாகாது. மூலத்தாதுவிலிருந்து இன்று நாம் அலுமினியம் எனக் கூறும் உலோகத்தை உற்பத்தி செய்யும் முறையைக் கண்டுபிடித்து உலகிற்கு உதவியவர்களை நாம் எங்ஙனம் மறந்துவிட முடியும்? உற்பத்தி செய்யும் ஏதோ ஒரு முறையைக் கண்டு பிடித்து விடுவது பெரிதன்று. குறைந்த செலவில் வியாபார முறையில் பெருவாரியாக உற்பத்தி செய்வதற்கான முறையைக் கண்டு பிடிப்பதில் தான் சாமர்த்தியம் உள்ளது. இச் சாமர்த்தியத்தைக் காட்டி, வருப், அலுமினியம் அற்புதமானதோர் உலோகமாவதற்குப் பெரிதும் காரணமாயிருந்தவருமான சார்லஸ் மார்ட்டின் ஹால் (1863–1914) பிரபல விஞ்ஞானியாவார். அவர் கண்டு பிடித்த உற்பத்தி முறை அலுமினியத்தின் வரலாற்றில் ஒரு புரட்சியை உண்டாக்கியது. அலுமினியம் எளி

தில் கிடைக்கக் கூடிய அற்புதப் பொருளாயிற்று. இவ் அமெரிக்க விஞ்ஞானிக்கு முன் உற்பத்தி, முறை இருந்து வந்த நிலையையும் இவரது புரட்சிகரமான உற்பத்தி முறையையும் பற்றி ஒரு சிறிது அறிந்துகொள்ளுவோம்.

1827-ல் தான் இன்று நாம் அலுமினியம் என வழங்கும் உலோகம்கண்டுபிடிக்கப்பட்டது. அவ் வருடம் ஓய்லர் என்னும் பிரபல ஜர்மனிய விஞ்ஞானி அலுமினியம் குளோரைட் என்னுமூலப்பொருளை மூசையில் இட்டுபொட்டாஸியத்துடன் சூடு செய்து சாம்பல் நிறமான அலுமினியப் பொடியை முதன் முதலாகத் தயார் செய்தார். அப் பொடியைத் தேய்த்து சுத்தம் செய்தபோது, அது பிரகாசிக்க ஆரம்பித்தது; அலுமினியம் பிறந்தது.

பெருவாரி உற்பத்திக்கு

ஆனால் இவ்வுற்பத்தி முறை கடினமாகஇருந்தது. உற்பத்தியும மிகச் செலவும். 1854ல் தெவில் என்னும் பிரஞ்சு விஞ்ஞானி பொட்டாஸியத்திற்குப் பதிலாக மலிவான உலோகமான சோடியம் எனனும் ஒரு வகை உப்பை உபயோகித்து அலுமினியத்தை உற்பத்திசெய்தார்.இம்முறைப்படி உறபத்தியான அலுமினியம் ஒரு ராத்தல் எடை 18 சவரன் விலை மதிப்புடையதாயிருந்தது இவ் வளவு விலையுயர்ந்த உலோகத் தைப் பெருவாரியாக உற்பத்தி செய்வது எங்ஙனம்? ஆகவே, அலுமினியம் ரசாயன அபூர்வப் பொருளாகவே இருந்து வந்தது. 1860-ல் இதே முறையில் தயாரிக்கப்பட்ட அலுமினியத்தின் விலை ஒரு ராத்தல் எடை சுமார் இரண்டு சவரன் அல்லது முப்பது ரூபாயாக இருந்தது. வெள்ளியைப் போல விலையுயர்ந்து இருந்த இப்பொருளைப் பெருவாரியாக உற்பத்தி செய்வது எங்ஙனம்? அலுமினியத்தை மலிவாகவும் பெருவாரியாகவும் உற்பத்தி செய்ய வேண்டுமானால், அதன் உற்பத்தி முறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படவேண்டுமென அறிஞர் உணர்ந்தனர். விஞ்ஞானிகள் விடாமல் முயன்றனர். இந்த நிலையில்தான் சார்லஸ் மார்ட்டின் ஹால் தோன்றினர்.

மார்ட்டின் ஹால் ஆராய்ச்சி

சார்லஸ் மார்ட்டின் ஹால் அமெரிக்காவில் ஓஹியோ ராஜ்யத்தில ஓபர்லின் என்னும் ஊரில 1808-ல் கிராமப் பூசாரி ஒருவருக்குப் பிறந்தார். இளமையில தம தகப்பனர் வைத்திருந்த ரசாயன நூல் ஒன்றைத் தற்செயலாகப் படிக்க நேர்ந்தபோது அவருக்கு ரசாயன ஆராய்ச்சியில் சுவை ஏற்பட்டது பதினைந்து வயதுமாணவராயிருந்தபோதே சோதனைக் குழாய்களை வைத்துக் கொண்டு அவர் சோதனைகள் செய்ய ஆரம்பித்தார். இருபத்திரண்டு வயதில் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது, ஆசிரியரான ஜிவே சோதனைக் கூடத்திலிருந்த தம மாணவரை நோக்கி, " அலுமினி

யத்தை வியாபார முறையில் பெருவாரியாக உற்பத்தி செய்வதற்கான நவீன ரசாயன முறையை உங்களில் எவரேனும் கண்டுபிடித்தால் அவன் உலகிற்கே நன்மை செய்வதோடு தானும் பெருஞ் செல்வம் திரட்டலாம்' என்றார். அதைக் கேட்ட ஹால் தம் வகுப்புத் தோழன் ஒருவனிடம் "நான் எப்படியேனும் அவ்வுலோகத்தைக் கண்டுபிடிக்கப் போகிறேன்" என்று உற்சாகத்துடன் கூறினார். அவ்வுறுதியின்படியே தீவிரமாகச் சோதனைகள் நடத்தவாரம்பித்தார். உலோகங்களிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்க மின்சார சக்தியைப் பயன்படுத்தலாம் என்னும் எண்ணம் அவர் மனதில் பட்டது. ரசாயன சோதனைக்குரிய கருவிகள் உபகரணங்கள் முதலியவற்றையெல்லாம் சேகரித்து ஓரிடத்தில் தம் சோதனைச் சாலையை அமைத்துக் கொண்டார். பிறகு தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆறு மாதமான பின் ஒரு நாள் ஆசிரியரிடம் வந்து 'நான் கண்டுபிடித்துவிட்டேன்' என்று பெருமையுடன் கூறினார். அவர் உள்ளங்கையில் ஒரு டஜன் அலுமினிய மணிகள் இருந்தன. 1886ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23-ந் தேதி இது நடந்தது.

பாக்ஸைட் அடுத்த நிலையிலுள்ள அலுமினியம் ஆக்ஸைடாகும். இருபத்து மூன்று வயதேயான நம விஞ்ஞானி முதலில் அதை ரசாயன முறைக்கு உட்படுத்தி இரும்பு ஆக்ஸைட் போன்ற அசுத்தங்களை அதனின்று நீக்கிப் பின்னர் தூய ஆக்ஸைட்டாக அது ஆகும்படிச் செய்தார். பிறகு அதில் மிகவும் சக்தி வாய்ந்த மின்சார ஓட்டத்தைப் பாய்ச்சினார். அலுமினியமும் பிராண வாயுவும் தனித்தனியாகப் பிரிந்தன. பிரிந்தவுடன் உலையிலிருந்து ஒருவித சிவப்புத் திரவம் அடியிற் சேர்ந்து குழாய் வழியாக வெளியே வந்தது. இச் சிவப்புத் திரவத்தைக் குளிரச் செய்தார். கச்சா அலுமினியம் பிறந்தது. இதுவே அவர் கையாண்ட முறை. இம் முறை புரட்சிகரமானதொரு முறையாகும். இதன் மூலம் ஹம்பரி டேவிஸ், ஒய்லர், தெவில் இவர்களைப் போன்ற புகழ் பெற்ற ரசாயன நிபுணர்கள் ஐம்பது ஆண்டுகளாக முயன்றும் கண்டு பிடிக்க முடியாததொன்றைச் சாதித்தார். ஹால் கண்டுபிடித்த இம்முறையே இன்று வழங்கி வருகிறது. இம் முறைப்படி உற்பத்தி செய்யப்படும் அலுமினியம் வருடந்தோறும் அதிகரித்து வருகின்றது. உற்பத்திச் செலவு குறைந்து விட்டதால், விலையும் குறைந்து விட்டது. அலுமினியம் புதியதொரு தொழிலாகி விட்டது.

அமெரிக்க விஞ்ஞானியான ஹால் கண்டு பிடித்த சில வாரங்களுக்குள் போல் ஹெரூல் என்னும் பிரெஞ்சு விஞ்ஞானிகாமும் இதே முறையைத் தனியாகக் கண்டுபிடித்தார். ஒருவரை யொருவர் அறியாமல் செய்த இதை யார் முதலில் கண்டு பிடித்தது என்

னர் பிரச்னை எழுந்தது. ஐக்கிய அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி டாப்ட் விஷயத்தை ஆராய்ந்து ஹால் கையாண்ட முறை புதியதொரு கண்டுபிடிப்பு என்றும் அது அலுமினிய உற்பத்தியில் ஒரு புரட்சி செய்ததென்றும் அவரே முதன் முதலாக வழி சமைத்தவர் ஆதலால் பேடண்ட் உரிமைச் சட்டப்படி அவருக்கே எல்லா நலன்களும் உரிமைகளும் உண்டு என்றும் தீர்ப்பு அளித்தார். இத் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட விண்ணப்பம் 1903 ல் முடிவு செய்யப்பட்டது. அதன்படி பேடண்ட் உரிமை அமெரிக்க விஞ்ஞானி ஹாலுக்கும் ஐரோப்பாவுக்குள் போல் ஹெரூலுக்கும் அளிக்கப்பட்டது.

"தினமணி சுடர்"

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரசமும் கலந்த திராவகம் டைபாய்ட் காய்ச்சல் கிருமியைக் கொல்லும் சக்தி உடையது. புரோட்டீன் உணவைச் சீரணிக்கச் செய்யும் சக்தி பழ ரசத்திற்கு உண்டு. அன்னாசிப் பழ ரசம் மாமிசம், முட்டை இவைகளை எளிதில் சீரணிப்பிக்கும். காய்ச்சல் உள்ளவர்கள் பழம் சாப்பிடுவதனால், அவர்கள் வாய் சுத்தமாய் இருக்கும், சுவாசம் இன்பமாய் இருக்கும், அவர்களுடைய காய்ச்சலும் மதிப்படும்.

—"நல்வழி"

Please Contact:

For Spectacles and Good Cooling Glasses
Reliable and Prompt Service



"CHARLES BROS"

Opticians

31 & 32, FRUIT MARKET, MADRAS-1.

(Prop) **S. RAYPPA REDDY**

N. B:—Special attention given to postal order. Doctors' Prescriptions executed with accuracy.

Special Concession will be allowed to *Teachers* and *Pupils*

PENS :—Sales & Service

தமிழ்நாட்டுப் பண்பாடு

பேராசிரியர்: சா. அப்துல்கபூர் எம். ஏ.

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு என்பனபோன்ற சொற்கள் இன்றைய உலகின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுதியாக ஒலித்துவரக் காண்கிறோம். பல்லாண்டு காலம் அடிமை வாழ்விலே சிக்கி மிடிமை வாழ்வு நடாத்திய நாடுகள் விழிப்படைந்து விடுதலையடைந்ததும், களிப்படைந்து முன்னேற விழைகின்றன.

பண்டையோர் வாழ்க்கைமுறைகளைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி நிகர் இலக்கியங்களும், மக்கள் அழகுணர்ச்சியின் நுண்ணிய உயிர்ப்பெனத் திகழும் அருங்கலைகளும், அகத்தையும் புறத்தையும் ஒருங்கே உயர்த்துவதற்குதவுகின்ற நாகரிகமும், இம்மூன்றாலும் உருவாக்கப்படுகின்ற பண்பாடும் ஒரு நாட்டு முன்னேற்றத்தின் ஒப்பிலாத தூண்களெனச் சொல்லலாம். ஆகவே முன்னேற்றத்தை நோக்கி விரைந்து செல்ல விழைகின்ற மக்கள் இலக்கியத்தைப் போற்றுகின்றார்கள். கலையை வளர்க்கின்றார்கள். நாகரிகத்தைக் குறித்துப் பேசுகின்றார்கள். பண்பாட்டின் மேம்பாட்டை உணர்கின்றார்கள். இந்நிலையிலேதான், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இன்சுவை இலக்கியங்களையும் கவின்பெறு கலைகளையுங் கொண்டு நாகரிக வாழ்வு நடாத்திய நற்றமிழ் நாடு பண்டைப் பெருமைகளை எண்ணி எண்ணி மகிழ்கின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அழியாமற் போற்றிவந்த பண்பாட்டின் உயர்வினை உன்னியுன்னி உவகை பூக்கின்றது.

'பண்பாடு' என்னும் சொல்லே அதன் பொருளைத் தெளிவாக விளக்குகின்றது. வறண்ட நிலத்திலே வளமாக நீர் பாய்ச்சி, ஏர் பூட்டியுழுது, பண்பட்ட நிலத்திலே வித்தினை விதைத்து, எருவிட்டு வளர்த்து, களைபிடுங்கிக் காத்து, பொன்னெனக் குலுங்கும் செந்நெல்லைக் கண்டு சிந்தை குளிர்கின்றான் உழவன். வண்டமிழ்ப் பண்ணை, தண்டமிழ்க் குறளால் பாடி வான் புகழ் கொண்ட வள்ளுவனும், பண்பாடு வளர்க்கும் செஞ்சொல் லோவியர்களான புலவர் பெருமக்களை உழவுக் கண்கொண்டு நோக்கினான்.

"வில்லேர் உழவர் பகை
கொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"

எனப் பாடினான்

படைவீரர்கள் வில்லையே ஏராகக் கொண்டு பகைப் புலங்களை உழுகின்றார்கள். சொல்லாய்ந்த கூத்தர்களாகிய புலவர்களோ, சொல்

லேயே ஏராகப் பிடித்து மக்கள் தம் நெஞ்சக் கழனியை உழுது பண்படுத்தி, நற்கருத்தாம் வித்துக் களை விதைத்து, நல்வாழ்வாம் பயிரைக் கண்டு மகிழ்கின்றார்கள். இவ்வாறு வாழ்வுப் பயிரின் வித்தெனத் தரும் கருத்துக் கருவூலங்களைக் கன்னித் தமிழிலே வடித்தெடுத்த புலவர்கள் தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பொருத்தமான இடங்களிலே புலப்பட வைத்துள்ளனர்.

ஒரு நாட்டின் உயர்வு, அந்நாட்டு மக்களைப் பொறுத்ததே எனப் புகன்றார், பைந்தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டி. நாடாயிருப்பினும் காடாயிருப்பினும் பள்ளமாக இருப்பினும், மேடாக இருப்பினும் நிலம் பெருமைக்கு அடிப்படையன்று. விண்ணை முட்டும் மலைகளும், கண்ணைக் கவரும் இயற்கை எழிலும், இன்பச் சோலைகளும் இனிய சாலைகளும், வற்றாத ஆறுகளும்வளமான வயல்களும் இருப்பதனால் மட்டும் நாட்டிற்கு உயர்வு வராது. வறண்ட பாலைவனமாயினும் ஆங்கு வாழ்கின்ற மக்கள் நல்லவர்களாகிவிட்டால் அந்நிலம் பெருமைக்குரியதாகிறது. இது கருதியே,

"நாடா கொன்றோ காடா
கொன்றோ
அவலாகொன்றோ மிசையா
கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய
நிலனே"

என வாழ்த்தினார் ஔவை.

இதனையே இன்னொரு முறையில்,

"உறுபசியும் ஓவாப்பிணியும்
செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்றார் வள்ளுவர்.

நாடு நாடாகத் திகழவேண்டுமாயின் மக்களை வருத்தும் பசிப் பிணியிருத்தல் கூடாது. பசிப்பிணியுடன் உடற்பிணியும், உட்பகையும், வெளிப்பகையும் இல்லாத நாடே நாடென நவின்றார் நாவலர் பெருந்தகை.

இத்தகைய நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எத்தகைய நாகரிகத்தைப் பின்பற்றி வாழ வேண்டுமென்பதையும் வள்ளுவத் தோன்றல் தெள்ளுதமிழ்க் களஞ்சியத்திலே தெளிவூட்டத் தவறவில்லை.

"பெயக்கண்டும் நஞ்சுண்
டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்"

என்பது அப்பெரு நாவலர் பேருரை.

நம்மோடு பழகிய ஒருவர் நமது உணவில் நெஞ்சுகலந்து கொல்லத் துணிகின்றார். அந்த நேரத்தில் அதைக் கண்டுணர்ந்து நாம் கூறி விட்டால் அவர் உள்ளம் எவ்வளவு வேதனைப்படுமென்பதை உணர்ந்து, நஞ்சு கலந்த உணவைக்கூட நாம உண்டு அமைய வேண்டும்; அதுவே யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்

ண்ணுடத்தை விரும்புபவர் செயல். இத்தகைய உள்ள உயர்வு தான் தமிழ் வளர்த்த நாகரிகம். இந்நாகரிகம் உருவாகிய பண்பாடு தான் திருக்குறளின் உயிர்நாடி போலப் 'பண்புடைமை' எனும் தலைப்பினைத் தாங்கி மாறாத முறையில், நூறாவது அதிகாரமாகவும் அமைந்தது. உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்னுமாப் போல் பண்புடையோரிடத்தில் பொருந்தியிருப்பதாய் உலகம் உள்ளதாகி இயங்குகின்றதென்ற கருத்தையும் இங்குதான் வள்ளுவர் வெளியிடுகின்றார். அறிவின் சிறப்பையும் ஆற்றலையும் குறித்து வானளாவப் புகழ்ந்த வள்ளுவர் —"அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற முடிவுக்கு வந்த வள்ளுவர் — அறிஞர் பெருமகன் ஒருவனைப்பார்க்கின்றார். அவனோ அரம்போன்ற திறமுடையான்; தன் அறிவுத் திறத்தால், அவனியின் அறிஞர் பெருமக்களை எல்லாம வென்று வெற்றிக் கொடி நாட்டியவன். எல்லாம் அறிந்தான்; ஆனால் மனிதப் பண்பு அவனிடத்தில்மருந்துக்குக்கூடக் கிடையாது. ஆகவே அவன் வள்ளுவர் கண்களுக்கு ஓங்கி வளர்ந்ததோர் கம்பமெனக் காட்சி தருகின்றான்.

"அரம்போலும் கூர்மைய
ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்"

இது போன்று, அறிவிருந்தும் பண்பிழந்த மக்களை வள்ளுவனார் காய்கின்ற இடங்கள் மிகப் பல. பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாதவனை நோக்கி, "அறிவினான் ஆகுவ துண்டோ?" என்கின்றார். யார் மாட்டும் வெஃகி வெறிய செய்வானை நோக்கி, "அஃகி அகன்ற அறிவென்னாம்?" என்றார் சான்றோர், உறுப்புக்களால்உயர்வு பெற்றிருக்கின்ற ஒருவனையோ ஒருத்தியையோ மனிதப் புனிதனெனக்கருதி மதிமயங்கார். பரந்த மார்பும் விரிந்த நெற்றியும், அறிவொளி வீசும் கண்களும், அழகொளி மிளிரும் முகமும், குன்றனைய தோளும், கண்டனைய மொழியும் வாய்க்கப்பெற்றான் ஒருவன், அறல்போல் கூந்தலும் பிறைபோல் திருநுதலும், கொலைவில் புருவமும குவளைக்கண்ணும், எட்பூ நாசியும், எழிலார் காதும், பாலைச்சிரிப்பும், பவழ மேனியும் வாய்க்கப் பெற்றாள் ஒருத்தி. இவர்கள் இருவரும் மனிதரென்னும் தகுதியைப் பெறவேண்டுமாயின் எந்த அளவுக்குப் பண்புடையவர்கள் என்பதையே நோக்குதல் வேண்டும்.

"உறுப்பொத்தல் மக்களொப்பு
அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு."

வள்ளுவரின் இவ்வாய்மொழிக்கொப்ப, உறுப்புக் குறைவுபட்டும் இன்றளவும் இலக்கியத்தில் புகழ் மணம் பரப்பிப் பொலிவுடன் திகழும் புலவர் பெருமக்களைப் பார்க்கின்றோம். அவர்கள் பெற்றிருந்த பண்பாட்டின் காரணமாக அங்கம் குறைந்தும் தங்கமெனத்

திகழ்கின்றார்கள். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், அந்தகக்கவி வீரராகவ முதலியார், இரட்டைப் புலவர்கள் போன்றோர் இதற்குப் போதிய சான்றாவர்.

இவ்வாறு பண்டைத் தமிழர் கண்ட மனிதப் பண்பையே தமிழ்ப் பண்பெனப் பகர்கின்றோம். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணிலே ஊறிக்கிடக்கின்ற உயரிய பண்பாக அது காட்சிதந்து கனிவிக்கிறது. சங்கத்துச் சான்றோர் தந்த சொல்லோவியங்களில் உயிர்நாடியென அது ஒளிவிடுகிறது. கணியன் பூங்குன்றனார் பாடிய பாட்டின் தொடக்கம் இப் பண்பாட்டின் அடிப்படையை அழகுற அமைத்துக் காட்டுகிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” இதுவே தமிழ்ப் பண்பாட்டின் தலையாய நிலை. பண்டை நாட் புலவர்களும், இடைக்காலப் பிற்காலப் புலவர்களும், இவ்வுயரிய கொள்கையைப் பலவேறு உருவங்களில் தங்கள் கவிதைகளிலும், காவியங்களிலும், தனிப் பாடல்களிலும், பெரு நூல்களிலும் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ எனப் புகன்றார் பெரு நாவலர் பெருந்தகை. ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்றார் திருமந்திரம் தந்த திருமூலர். சோழநாட்டிலே பிறந்து, பாண்டியிலே கணவனைப் பறிகொடுத்துச் சேரநாட்டிலே கோயில்கொண்ட கண்ணகியின் வரலாற்றைக் கன்னித் தமிழிலே பாடினார் இளங்கோவடிகள். அயோத்தியிலே அன்புத் தம்பியர் மூவரைக் கொண்டு, கங்கைக் கரையிலே சிவங்கரியின் ஏற்றைய வேடன் குகனுடன் தோழமை பூண்டு, ‘குரங்கினத்’ தலைவனும் சுக்ரீவனை அன்போடு அணைத்து, ‘அரக்கர்’ குலத்தின் வீடணனையும் உடன் சேர்த்து, உடன் பிறந்தோர் எழுவரெனக் கருதிய இராமனின் கதையைப் பாடினான் கம்பன். “பிறப்பில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடைமை” என்னும் இன்றைய புரட்சிக் கவிஞர்களின் எழுச்சிக் குரலும் இப் பண்பாட்டின் அரண்களாகவே அமைந்துவிடுகின்றன. மக்களினத்தின் ஒருமையையும், பெருமையையும் ஐக்கிய நாட்டின் அவையினர் ஆராய்ந்து கூறுவதற்கும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் அது தமிழர்களின் குறிக்கோளாக இலங்கிற்று என்பதை நினைக்கவே நெஞ்சு இனிக்கின்றது.

இப் பண்பாட்டிலே ஊறிய தமிழன், அலைகளைப் பிளந்தும், மலைகளைக் கடந்தும், அயல்நாடுகளிலே அடியெடுத்துவைத்தான். ஈழத்தையும், கடாரத்தையும், மலேயாவின் சோலைகளையும், ஜாவாவின் சாலைகளையும், ஆப்பிரிக்காவின் ஆரண்யங்களையும் தனது சொந்த நாடுகளாகவே கருதினான். அங்கு வாழ்ந்தோரை யெல்லாம் உடன் பிறந்தோராகக் கருதி உறவுபூண்டான். அழகு நகர்களை அமைத்தான்; உழைத்து

உழைத்து, மண்ணான நிலத்தைப் பொன்னான நிலைக்கு மாற்றினான். உள்நாட்டிலும் உயர்ந்த நிலையிலே வாணிகம் வளம்பெற்றது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும்
பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும்
அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல்
துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து
ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரியவீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை
மறுகு"

இவ்வாறு உலகப் பொருட்களெல்லாம் தமிழகத்துக் கடைவீதிகளிலே குன்றுபோலக் குவிந்துகிடந்தன. வாணிகத்தின் நிமித்தம் வந்த வடவரும், சீனரும், கிரேக்கரும், உரோமரும் ஆரியரும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வைக்கண்டு உவந்து சென்றனர்.

இப்பண்பாடு ஒப்புயர்வற்ற ஓர் ஒருமை நோக்கைப் பயந்தது. மனித குலத்தின் உயர்வுக்காகப் பாடுபட்ட மனிதப் புனிதர்களால் விளக்கப்பட்ட நெறிகள், தமிழகத்திலே பழைய வரலாறு விந்தைக்குரியதாகவே அமைந்துள்ளது. அவைதியான நெறியாக கொண்ட அவ்வரலாறு அனைத்துலக மக்களுக்கும் ஒரு வழிகாட்டியெனக்கொள்ளலாம். இன்பத் தமிழகத்திலே வாழ்ந்த அன்புத் தமிழர்கள் மொழியாலும் பண்பாலும் அழியாத உறவு பூண்டு வாழ்ந்தனர். ஒரு தாய் வயிற்றிலே பிறந்த செம்மல் செங்குட்டுவனும், இளவல் இளங்கோவடிகளும் முறையே வெவ்வேறு கொள்கைகளுடன் வாழ்ந்தவரென அறிகிறோம். சிலம்புச் செல்வம் தந்த அவ்விளங்கோவுடன், மணிமேகலைக் காப்பியம் தந்த பௌத்தராகிய சாத்தனார், ஆழ்ந்த நட்பினால் ஆர்க்கப்பட்டிருந்தார்.

—"திராவிட நாடு"

சிந்தனைச் செல்வம்

இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் ஓடினாலும் ஒன்றுதான், ஓடாவிட்டாலும் ஒன்றுதான். அதுபோலத்தான் வேலை செய்யாமலிருக்கும் சோம்பேறி வாழ்ந்தாலும் ஒன்றுதான். வாழாவிட்டாலும் ஒன்றுதான்.

— வில்லியம் கௌபர்

செய்திக் கொத்து

அணுக் கதிரியக்க நோயைத் தேநீர் போக்கிவிடும்!

டோக்யோ, ஜூலை 21

ரேடியோக் கதிரால் ஏற்படும் உடல் நலிவைத் தீர்க்க தேநீர் கைகண்ட மருந்து என்று இரு ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். தேயிலையிலுள்ள சத்துப் பொருள் ஸட்ரோட்டியம் 90 ரேடியோக் கதிர் புலனை உடலிலிருந்து வெளிக் கடத்தும் மருத்துவ சக்தி கொண்டிருக்கிறது என்று இவர்கள் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்திருக்கின்றனர்.

ஷிஜுகோ மருத்துவப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களான டாக்டர் தெய்ஜி உகாய்த, பேராசிரியர் எஷிச்சி உபயாஷி என்ற இருவர் இந்த ரகசியத்தை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்தவர்கள். அமெரிக்கா சின்சினட்டியில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் அமெரிக்க மருத்துவக் கலை சங்க ஆண்டு மகாநாட்டில் தங்களுடைய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பை விளக்கப்போவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

ஜப்பானியத் தேயிலை ஏற்றுமதி சங்கத்தினரும் இவர்களின் இந்தக் கண்டுபிடிப்பு பற்றி ஓரறிக்கை அனுப்பி வைத்துள்ளனர்.

வெள்ளை எலிகளைக் கொண்டு சோதனை செய்ததில் தேயிலையிலுள்ள டானின் என்ற சாயச் சத்து உடலிலுள்ள ரேடியோக் கதிர்ப் புலன்களை வெளியேற்றுவது தெரிய வந்தது என்று இவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கடந்த உலக யுத்த முடிவில் அணுகுண்டு வீசப்பட்ட ஹிரோஷிமா, நாகசாகி மக்கள் டலர் ரேடியக் கதிர்களால் பாதிக்கப் பட்டிருப்பது அறிந்ததே.

தேநீரைக் குடித்தால் ரேடியோக கதிர் நோய வாதனை குறைவதாக இவர்கள் ஜப்பான் தேயிலை ஏற்றுமதி சங்கத்திற்குக் கடிதங்கள் மூலம் தெரிவித்தனர். இந்தச் செய்தி அறிந்த பிறகே இரு டாக்டர்கள் வெள்ளை எலிகளைக் கொண்டு இந்தச் சோதனை நடத்தினர்.

ஹிரோஷிமா–நாகசாகி மக்கள் தெரிவித்தது உண்மை என்று கண்டுபிடித்தனர்.

புதிய பட்டதாரிகள் அனைவர்க்கும் கட்டாய தேசிய சேவை

1961-62 முதல் அமுலுக்கு வரும்

—புதுடில்லி, ஜூலை 24

எல்லாப் பட்டதாரி மாணவர்களும் கட்டாயமாகத் தேசிய சேவை செய்தாக வேண்டும் என்ற ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தை மத்திய கல்வி அமைச்சரகம் தொகுத்திருக்கிறது.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் துவக்கமாகும் 1961-62 முதல் இந்த ஏற்பாடு ஆரம்பமாகும். அவ்வாண்டில் பட்டம் பெறும் மாணவர்களை, துவக்கமாகக் கொண்டு இந்தக் கட்டாய தேசிய சேவை ஏற்பாடாகி ஆண்டு தோறும் தொடர்ந்து நடக்கும் என்று தெரிகிறது.

சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்களும் இந்தத் திட்டத்தை அங்கீகரித்து விட்டதாகவும் அறியக் கிடக்கிறது.

ஆகஸ்டு 8, 9 தேதிகளில் புதுடில்லியில் நடக்கவிருக்கும் ராஜ்யங்கள் கல்வி மந்திரிகள் மாநாட்டில் இந்தத் திட்டத்துக்கு ஆமோதிப்புப் பெற வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது.

ஒரு வருட சேவை

இந்தப் பட்டதாரி மாணவர்கள் 6—மாதம் முதல் இரண்டு ஆண்டு வரை சேவைக்குரிய காலம் இருக்கலாம் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தப் பயிற்சியாளர் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் பயனுள்ள அளவுக்குப் பயன்பட வேண்டுமானால் இவர்கள் ஓராண்டு காலம் தேசிய சேவை செய்தாக வேண்டும் என்று அதிகாரிகள் வட்டாரத்தில் கருதப்படுகிறது.

வருடச் செலவு ரூ. 5 கோடி

இந்தத் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 5 கோடி செலவாகுமென சுமாராகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இப்போதைய நகல் திட்டப்படி உடல் நலமின்மை வறுமை ஆகிய காரணங்களால் ஒதுக்கப்படுபவர்கள் போக முதல் ஆண்டில் 50,000 பேர் இந்த சேவையில் ஈடுபட வேண்டியதாகும்.

வேலைகள்

உடல் உழைப்புத் தேவைப்படும் உற்பத்தித் துறை வேலைகளில் இந்தப் புதுப் பட்டதாரிகள் ஈடுபடுத்தப்படுவர். அபிவிருத்தி வேலைகளில் இப்போது ஆள் பற்றுக்குறையாக உள்ளவற்றில் இவர்கள் சேவை புரிவர். ஆயினும் அந்த வேலைகளில் இப்போதுள்ள பட்டதாரிகள் நீக்கப்படமாட்டார்கள்.

பெண்கள் சேவைக்கு முக்கியத்வம்

பெண் பட்டதாரிகள் சேவை விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படும்.

இளமைப் பட்டதாரிகளின் கல்வி அனுபவம் சாத்தியமான அளவு பயன்படும் முறையில் தகுந்த வேலைகள் இவர்களுக்குத் தரப்படும.

சட்டம் வரும்

இந்தத் திட்டத்தை அமுலாக்க மத்திய சட்டசபையில் சட்டம் செய்யவும் உத்தேசித்துள்ளனர். பட்டம் தரப்படுவதன் முன்பாக இந்தக் கட்டாய தேசிய சேவைசெய்ய வேண்டி நேரிட்டால் இதற்கான மத்திய சட்டம் ஒன்று இருப்பது அவசியம் என்றும் சுட்டிக் காட்டப் படுகிறது. இல்லாவிட்டால் சுமார் 40 பல்கலைக்கழகங்களின் விதிகளைத் திருத்தியாக வேண்டும்.

பல ராஜ்யங்களின் தேவை வசதிகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகையால் பொதுப்படைக் கொள்கை வகுக்க ஒரு மத்திய குழு அமைக்கவும் இத் திட்டம் யோசனை கூறுகிறது.

இருந்தாலும் ராஜ்யங்கள் தங்கள் வசதி வாய்ப்புகளுக்குப் போதுமான அளவு பயிற்சி பெற்ற கோஷ்டிகள் முகாம தலைவர்கள் மூலம் இத் திட்டத்தை ஆண்டுதோறும் அமுல் நடத்தவும் அனுமதிக்கப் படும். இந்தக் கோஷ்டி முகாம தலைவர்களாக பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படலாம்.

1961-62-ல் இத் திட்டம் முழு அளவுக்கு அமுலுக்கு வரும். இதற்கு முன்னதாக முன்னோடி ஏற்பாடாக இந்தப் பட்டதாரிகளுக்கு 3 மாத காலம் முகாம் பயிற்சிகள் நடத்தலாம்.

கட்டாயமா? விருப்பமா? என்ற பிரச்னையும் பரிசீலிக்கப் பட்டது. கட்டாயமாக்கினால்தான் கருதிய நல்ல பலன் ஏற்படுமென முடிவு செய்யப்பட்டது.

டிக்கெட் இல்லாத பிரயாணத்தால் ரூபாய் ஐந்து கோடி நஷ்டம்

சென்னை இரயில்வே மாநாட்டில் தகவல்

சென்னை, ஜூலை 19—

தென் பிராந்திய ரயில்வே கௌரவ மாஜிஸ்திரேட் மாநாட்டை நேற்று இங்கு ஆரம்பித்து வைத்துப் பேசிய ரயில்வே உதவி மந்திரி திரு. ஷா நவாஸ்கான் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களால் ஓராண்டிற்கு ரூ. 5 கோடி நஷ்டமாகிறது என்று தெரிவித்தார்.

தென் பிராந்திய ரெயில்வே தலைமை அலுவலக ஹாலில் மாநாடு நடைபெற்றது.

அபாயச் சங்கிலியை அதிகமாக உபயோகிப்பது ரயில்களின் ஓட்டத்தை அதிகமாகத் தாமதப்படுத்துகிறது என்றும் திரு. ஷா நவாஸ்கான் கூறினார்.

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வதால் ஏற்படும் கேடுகளைப்பற்றி அவர் விளக்கிக் கூறினார். மாஜிஸ்திரேட்டுகள் தரும் தீர்ப்பு அக்கேடுகளைக் களைவதாக இருக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களின் சதவிகிதம் சென்னை எழும்பூர்-விழுப்புரம், ராஜமகேந்திரபுரம்—வால்டேர், மணியாச்சி—திருநெல்வேலி குண்டக்கல்—தர்மாவரம் ஆகிய பிரிவுகளில் முறையே 7, 7, 6, 9, 7, 9, 9, 8 ஆக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

அபாய சங்கிலியைப் பிடித்திழுத்து ரயிலை நிறுத்தும் பழக்கம் அதிகரித்து வருகிறதென்றும் நாட்டின் மற்ற பாகங்களைவிட தென்னாட்டில் அப்பழக்கம் குறைவாக இருக்கிறதென்றும் திரு. ஷா நவாஸ்கான் தெரிவித்தார்.

நாடு முழுவதுமுள்ள ரயில்வே மாஜிஸ்திரேட்டுகள் பூரண ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்றும் அதற்காக அவர்களைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

பாரசூட் பயிற்சி பெறும் முதல் இந்தியப் பெண்மணி!

ஆக்ரா, ஜூலை 17—

வானவெளி பாரசூட்டிலிருந்து முதல் தடவையாக குமாரி ஜித்தா சந்தா இன்று வெற்றிகரமாகக் குதித்தார். இந்தக் காரியத்தை இந்தியாவிலேயே சாதித்துள்ள முதல் பெண்மணி இவரே யாவார்.

பிளைட் லெப்டினண்ட் சந்தா விமானப் படையில் ஒரு டாக்டர். ஆக்ரா பாரசூட் படைகளில் பயிற்சி பெறுவதற்காக முன் வந்து கடந்த மே முதல் பயிற்சியும் பெற்று வருகிறார்.

நேற்றே அவர் பாரசூட் மூலம் குதிப்பதாக இருந்தது. சீதோஷ்ண நிலை காரணமாக இன்று காலைவரை அது ஒத்தி வைக்கப் பட்டது. இன்னும் 6 தடவை இதே காரியத்தை குமாரி சந்தா வெற்றிகரமாகச் செய்து விட்டால் அவர் 'பாரசூட் ரூபர்விங' பகுதிக்குத் தகுதி பெற்று விடுவார்.

1942-ல் முதன் முதலில் பாரசூட்டிலிருந்து குதித்த ஆணும் ரங்கராஜ் என்ற டாக்டர்தான். 25 வயதுள்ள குமாரி சந்தா 195[illegible]-ல் கல்கத்தா வைத்தியக் கல்லூரியில் பட்டம் பெற்றார். ஒரு வருஷத்திற்குப் பிறகு விமானப் படை வைத்தியத் துறைக்கு அவர் அனுப்பப்பட்டார். தற்பொழுது அவர் கலைக்குண்டா என்ற விமானப்படை நிலையத்தில் வைத்திய அதிகாரியாக இருக்கிறார்.

சூரியன் கொதிப்பால் ஒயர்லஸ் போக்குவரத்து 12 மணி நேரம் தடை

---

11 ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் அதிசயம்

பம்பாய், ஜூலை 17—

இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் இடையே கம்பியில்லாச் செய்திப் போக்குவரத்து நேற்று 12 மணி நேரம் தடைப்பட்டுப் போயிற்று. ஒயர்லஸ் சமிக்ஞைகளை உயர்வானுக்குச் செல்லாது நில மண்டலத்துக்குச் செல்லச் செய்யும் வானத் திரைப்பு— சூரியன் புள்ளிகளால் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். 15, 16-ந் தேதி நள்ளிரவுக்கு முன் துவங்கி நேற்று காலை 10 மணிக்குப் பிறகும் அதாவது 12 மணி நேரம் இந்தத் தடை மேற்குப் பாரிசத்திலும், கிழக்குப் பாரிசத்திலும் நீடித்ததாக பம்பாய் வெளிநாட்டுச்

செய்திப் போக்குவரத்து ஸ்தாபனம் அறிவித்தது. பம்பாய் பொரிவியிலுள்ள அ. இ. ரேடியோவிலும் இந்தத் தடை ஏற்பட்டது.

ஆனால் கப்பல்களுடன் செய்தித் தொடர்புக்கான பம்பாய் ரேடியோவும் சாந்தாகுரூஸ் விமானக்கூட ரேடியோவும் பாதிக்கப்படவில்லை.

11 ஆண்டுக்கு ஒரு முறை சூரியன் கொந்தளிப்பு

சூரியன் கொந்தளிப்பால் ஒயர்லெஸ் செய்திப் போக்குவரத்து தடைப்பட்டதாகவும் இவ்விதத் தடை இன்னும் சில நாட்கள் அல்லது சில மாதங்கள் கூட நீடிக்கலாம் என்றும் இம்மாதிரி சூரியக் கொந்தளிப்பு 11 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுவது இயல்பு என்றும் அவ்வமயம் சூரியன் எரியும் பொருள்களை வெளிக் கொட்டுவதால் உலகெங்கும் ஒயர்லெஸ் போக்குவரத்துத் தடைப்படுகிறதென்றும் பம்பாய் வெளிநாட்டுச் செய்திப் போக்குவரத்து நிபுணர் ஒருவர் கூறினர்.

கோடைக்கானல் செய்தி

மதுரை, ஜுலை 17—

ஜுலை 15-ந் தேதி திடீரென ஏற்பட்ட காந்தப் புயலால் ஒயர்லெசும் ரேடியோ போக்குவரத்தும் தடைப்பட்டதாக கொடைக்கானல் சூரிய நிலை ஆய்வுக்கூடம் நேற்று அறிவித்தது.

இந்தக் காந்தப் புயல் இரவு 8 மணி இரண்டு நிமிடங்களுக்குத் துவங்கி காலைவரை வீசியபடி இருந்ததாகவும் இவ்வளவு கடுமையான காந்தப் புயல் சமீபத்தில் ஏற்பட்டது கிடையாது என்றும் கொடைக்கானல் வானிலை அப்சர்வேட்டரி டிப்டி டைரக்டர் தெரிவித்தார்.

ரேடியோ தொடர்பு பெருமளவு பாதிப்பு

லண்டன், ஜுலை 16—

சூரியனில் ஏற்பட்டுள்ள புள்ளிகளினால் (பல மைல் நீளமும் அழமும் உடையவை) ரேடியோ தொடர்பு தோற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டன. இப்புள்ளிகளை புகை படிந்த கண்ணாடிகள் மூலம் வேறு எவ்வித கருவியின் உதவியுமின்றிப் பார்க்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த பாதிப்பு பல வாரங்களுக்கு இருக்கக்கூடும் என்றும் நியூயார்க்கில நிபுணர்கள் கூறுகின்றனர்.

சில மணி நேரம் குழந்தைகளை இறக்க வைத்து ரண சிகிச்சை!

இரத்தம் முழுவதும் வெளியிலெடுத்து "ரெப்ரிஜிரேட்டரில்" வைக்கப்பட்டதாம்

லண்டன், ஜூலை 12—

சின்னஞ்சிறு குழந்தைகளை சில மணி நேரம் இறந்த நிலையில் வைத்து ரண சிகிச்சை நடத்தி வெற்றி பெறும் முயற்சி லண்டனிலுள்ள மூன்று ஆஸ்பத்திரிகளில் வெற்றி பெறறுள்ளது.

குழந்தைகளின் உடலிலுள்ள இரத்தம், வெளியே எடுக்கப்பட்டு ரெப்ரிஜிரேட்டரிலுள்ளே செலுத்தி இரத்தத்தைக் குளிர்ச்சி அடையச் செய்வதன் மூலம் இவைகளின் உயிர் சில மணி நேரம் நீங்கியிருந்தது. இந்த நிலையில் இருதயம் ஓடாமல் சிலமணி நேரம் நின்று விட்டது. ரண சிகிச்சை நடந்தேறியதும் மீண்டும் இரத்தம் உஷ்ணப் படுத்தப்பட்டு உடலில் செலுத்தப்பட்டே உயிர் வந்து விட்டது.

இந்த முறை ரண சிகிச்சைக்குச் சுலபமாக இருக்கிறது என்றும், செயற்கை இருதயத்தைப் பிணியாளருக்குப் பொருத்தி ரண சிகிச்சை நடத்தும் முறையைவிட இது சிறந்தது என்றும் ரண சிகிச்சை வெற்றி விகிதமும் அதிக அளவில் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

அறிவுச் சுடர்கள்

அச்சம், ஆணவம், அதிகாரம் - எதுவும் நம்மை அசைக்கக் கூடாது. எங்கே எப்போது எதற்காக நாம் இறக்க நேரிட்டாலும் விடுதலை வீரர்களாகத்தான் இறக்க வேண்டுமே தவிர அடிமைச் சின்னங்களாகி அழிதல் ஆகாது.

— ஜோசையா க்வின்சி

கடவுள் நம்மை சுதந்தரம் உள்ளவர்களாகத்தான் பிறக்கவைத்தார். மனிதர்கள் நம்மை அடிமைகளாக்கப் பார்க்கிறார்கள். நான் கடவுளின் விருப்பப்படிதான் நடப்பேன் – சுதந்தரமாகத்தான் இருப்பேன்.

— டேனியல் ப்ளிஸ்

தீய நினைப்பு என்னும் இருளை அகற்றும் திருவிளக்கு மனச்சான்று. அந்த விளக்கை என்றும் அணையவிடாதீர்கள். இருளைச் சிறிதளவும் வளரவிடாதீர்கள்.

— ஜார்ஜ் வாஷிங்டன்

1965-66க்குள் எல்லாச் சிறுவருக்கும் கட்டாய, இலவச ஆரம்பக்கல்வி

சென்னை வழியில் சமூக ஆர்வத்தைப் பயன்படுத்த யோசனை

பெண்கள் கல்விக்கு ஆக்கம்; விளையாட்டு மைதானங்கள் அவசியம்

தேசிய சேவைக்குப் பரீட்சார்த்த ஏற்பாடு; மாநில மந்திரிகள் மாநாட்டு முடிவுகள்

1965—66-ஆம் ஆண்டுக்குள் 6 முதல் 11 வயதுவரையுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும் கட்டாய, இலவசக் கல்வியளிப்பதென்ற தனது முந்திய தீர்மானத்தை இன்று பிற்பகல் இங்கு முடிவடைந்த ராஜ்யக் கல்வி மந்திரிகளின் இரு தின மாநாடு ஊர்ஜிதம் செய்தது.

இந்த லட்சியத்தை எய்துவதற்காக மூன்றாவது அபிவிருத்தித் திட்ட ஆரம்ப (1961) முதல் கல்வித் திட்டத்தை அமுலாக்கத் துவங்க வேண்டுமென்றும், இதற்கான பூர்வாங்க வேலைகளை இப்போதிலிருந்தே தொடங்க வேண்டுமென்றும் மாநாடு வலியுறுத்தியது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விளையாட்டு, தேகாப்பியாசப் பயிற்சிகளுக்கு ஆக்கம் தருவது பற்றியும், தேவநாகரி லிபி சீர்திருத்தம் பற்றியும், (மாணவர்) தேசிய சேவைபற்றியும், தற்போதைய செகண்டரிப் பள்ளிகளை ஹையர் செகண்டரிப் பள்ளிகளாக மாற்றியமைப்பது பற்றியும் மாநாடு ஆலோசித்தது. மத்திய கல்வி மந்திரி டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி தலைமை வகித்தார்.

6 முதல் 11 வயது வரை கட்டாய இலவசக் கல்வித் திட்ட அமுலுக்குப் பின்வரும் நடவடிக்கைகளை மாநாடு சிபாரிசு செய்தது.

1. இதுவரை லட்சிய தேதியை ஒப்புக்கொள்ளாத ராஜ்யங்களின் மந்திரி சபைகள் உடனே ஒப்புக் கொள்வது.

2. மூன்றாவது அபிவிருத்தித் திட்டத்தில் இதற்குப் பிரதான பாத்யதை அளித்து, அமுல் நடத்துவதற்கான செலவுத் தொகையைத் தாராளமாகஒதுக்குவது, ராஜ்யங்களுக்கு மத்திய உதவி பற்றிப் பின்னர் தீர்மானித்துக்கொள்வது.

3. லட்சிய சித்திக்காக நாடு முழுவதும் பூரணமாக வசதிகளைத் திரட்டுவதோடு மக்களின் முயற்சியையும் பூராவாகப் பயன்படுத்துவது.

4. பெண்கள் கல்வி, பின் தங்கிய பிரதேசங்களில் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்குப் பிரத்யேக நடவடிக்கைகள் எடுப்பதோடு, குறிப்பாக இதற்காக ஆசிரியை எண்ணிக்கையையும் பின் தங்கிய பிரதேசத்தில் ஆசிரியர் எண்ணிக்கையையும் அதிகரிக்கத் தேவைக்கேற்ப துரித நடவடிக்கை எடுப்பது.

5. எல்லோருக்கும், இலவச, ஆரம்பக் கல்வியளிப்பதற்காக, ராஜ்ய சர்க்கார்களுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குமிடையே நிதி, நிர்வாகப் பொறுப்புகளைப் பங்கீடு செய்யப் போதிய பரிசீலனைக்குப் பின்னர் தேவையான ஏற்பாடு செய்வது.

6. சமீபத்தில் கல்வி சர்வே அடிப்படையில், கல்வி வளர்ச்சிக்குத் தேவைப்படும் வருடாந்திர வேலைத் திட்டம், செலவு மதிப்பீடு ஆகியவற்றை விவரமாகத் தயாரிகக முனைந்து, போதுமான அளவு புதிய பள்ளிகளைத் துவக்க அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதோடு, தற்போதுள்ளவற்றை விஸ்தரிக்கவும் ஏற்பாடு செய்வது.

சென்னைக்கு சபாஷ்

மதிய உணவு, பள்ளிச் சாதனங்களைச் சேகரித்தல், பள்ளிக் கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற விஷயங்களில் ஸ்தல சமூகத்தவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கல்வி வளர்ச்சிக்கு வகை செய்யும் சென்னை சர்க்காரின் வேலைத் திட்டத்தைப் பிற ராஜ்யங்களின் கவனத்துக்கு மாநாடு சிபாரிசு செய்தது.

கல்வி நிலையங்களில் மாணவரின் ஆட்ட-ஓட்டங்களுக்காக விளையாட்டு மைதானங்கள் அமையப்பெறுவது அதி முக்கியமாகுமென மாநாடு வலியுறுத்தி இதற்கு ஒதுக்குவதில் முன் பாத்யதை அளிக்க வேண்டுமெனக் கருதியது. பிரதி ராஜ்யத்திலும் விளையாட்டு மைதானச் சங்கங்களை நிறுவலாம். கல்வி நிலையங்கள், முனிஸிபாலிடிகள், பிற ஸ்தல ஸ்தாபனங்கள், மராமத்து இலாகா, நகர அபிவிருத்தி இலாகா ஆகியோருக்கு அதில் பிரதிநிதித்வமளிக்கலாம். தற்போதுள்ள விளையாட்டு மைதானங்களைப் பாதுகாப்பதோடு, புதிய மைதானங்களைத் தெரிந்தெடுத்து உபயோகத்துக்குச் சிபாரிசு செய்வது மேற்படி சங்கங்களின் நோக்கமாயிருக்கும்.

மூன்றாவது திட்ட காலத்தில் கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடுகையில் எல்லாப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் தேவைப்படும் விளையாட்டு மைதானங்களுக்கு வகை செய்வதோடு, ஓட்ட-ஆட்ட அலுவல்களில் முன்னணியிலிருப்போருக்குச் சில தூண்டுதல்களும் வசதிகளும் தர ராஜ்ய சர்க்கார்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய விளையாட்டுகளைப் பயிலவும், பயிற்சி முகாம்கள் நடத்தவும் சர்க்கார் ஆக்கமளிக்கவேண்டும்.

தேவநாகரி லிபி சீர்திருத்தம்

தேவநாகரி லிபி சீர்திருத்தம் சம்பந்தப்பட்டவரை, 1953-இல் லட்சுமணபுரியில் நடைபெற்ற மாநாட்டில் மாறுதல் செய்யப்பட்ட பிரகாரம சில விளக்கங்களோடு ஏற்கலாமென சிபாரிசு செய்யப்பட்டது இனிமேல் ஒரு தலைப் பட்சமாக லிபியை மாற்ற முயற்சிக்கலாகாதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஹையர் செகண்டரி பள்ளி 1965-66-க்குள்

ஹைஸ்கூல்களை ஹையர் செகண்டரிப் பள்ளிகளாக மாற்றியமைப்பது சம்பந்தப்பட்டவரை, சாத்தியமானவரை சீக்கிரமே செகண்டரிக் கல்வி சீரமைப்பு ஏற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும், மூன்றாவது திட்ட காலத்திற்குள் தற்போதைய ஹைஸ்கூல்களில் 50 சதவிகிதம் ஹையர் செகண்டரிப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டுமென்றும் மாநாடு சிபாரிசு செய்தது. இந்தக் காலத்தில் புதிதாக ஹைஸ்கூல்கள் துவக்கப்படலாகாதென்றும், ஹையர் செகண்டரி பள்ளிகளே நிறுவப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மூன்றாவது திட்ட காலத்திற்குள் 50 சதவிகிதப் பள்ளிகளை இங்ஙனம் மாற்றியமைப்பது, குறைந்தபட்ச புனர் நிர்மாணத் திட்டமாகுமென்றும், இந்த லட்சிய அளவைக் குறைப்பதால் சீரமைப்பு நோக்கமே குலைந்துவிடுமென்றும் மாநாடு வலியுறுத்தியது

மாணவர் தேசிய சேவை

மாணவர் தேசிய சேவைக்கான மத்திய கல்வி இலாகா வேலைத் திட்டத்தைப் பொதுவாக மாநாடு ஒப்புக்கொண்டு, திட்டத்தின் கல்வி அம்ச நோக்கத்தை வலியுறுத்திப் பின்வரும் சிபாரிசுகள் செய்தது:—

1. சில ஆண்டுகள் ஒரு பரீட்சார்த்தத் திட்டத்தை அமுலாக்கி அனுபவம் பெற்ற பின்னர் இந்தத் திட்டத்தைக் கட்டாய அடிப்படையில் புகுத்துவது பற்றி ஆலோசிக்கவேண்டும்.

2. மூன்று மாத அவகாசத்துக்குப் பரீட்சார்த்தத் திட்டம் வகுத்து, ஒரு சர்வகலாசாலைக்கு ஒன்று வீதம், சுயமாக முன்வரும் மாணவர்கள் விஷயத்தில் ஏற்பாடு செய்யலாம்.

3. பரீட்சார்த்தத் திட்டத்தை உருவாக்க ஒரு கமிட்டி நியமிக்கலாம்.

வேறு வழி இல்லையா?

1965-66-ம் ஆண்டு இறுதிக்குள் 6-லிருந்து 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்க வகை செய்வதென்ற முடிவை ராஜ்யக் கல்வி மந்திரிகள் மாநாடு உறுதிப்படுத்தியிருக்கிறது. அரசியல் சட்டத்

தில் குறித்த இலக்குக்கு இது மிகவும் குறைந்ததேயாயினும், இதையும் தற்போது அதிகாரிகள் உத்தேசித்துள்ள முறையில் நிறைவேற்றி வைப்பது எளிதல்ல. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட முடிவில் கல்வி பெறக் கூடிய குழந்தைகளின் தொகை 337 லட்சம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் அத்தொகையை ஏறக்குறைய மும்மடங்காக்க வேண்டுமென்பது தற்போதைய குறி. இந்நோக்கம் ஈடேற 40 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வைத்துக்கொண்டால் மேற்கொண்டு சுமார் 6½ லட்சம ஆசிரியர்கள் வேண்டும். இதற்கேற்ப ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களைப் பெருக்குவதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு இந்திய சர்க்கார் உருவான உதவி அளிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். கல்வியை விஸ்தரிப்பதில் சிறுவர்களுக்குப் பகல் உணவு, பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவது போன்ற இனங்களில் ஸ்தல மக்களின் ஒத்துழைப்பைப் பெற சென்னை சர்க்கார் கையாண்டு வரும் முறையை மற்ற ராஜ்யங்களுக்கும் மேற்குறித்த மாநாடு சிபார்சு செய்திருக்கிறது.

ஆனால் கல்வி விஸ்தரிப்பு நோக்கத்தை இந்நாட்டுப் பொருளாதார நிலைக்கேற்ப இன்னும் குறைந்த செலவில் நிறைவேற்றி வைப்பது சாத்தியமில்லையா என்று மேற்குறித்த மகாநாடு ஆராய்ந்திருக்கலாம். ஆரம்பக் கல்வி கட்டத்தில், அதாவது 6 முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ஒரு வேளைக் கல்வி போதும என்ற கருத்தைப் பல பிரபல கல்வியாளாகள் உறுதிப்படுத்தி யிருக்கின்றனர். அது ஏற்கப்பட்டிருந்தால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள், ஆசிரியர்கள் முதலிய வகைகளில் தற்போதுள்ள வசதிகளைக்கொண்டே ஏறக்குறைய இருமடங்குச் சிறுவர்களுக்குப் போதிக்க முடியும. மேலும் இதனால் சிறுவர்கள் முக்கியமாக கிராமாந்தரங்களிலுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு நாளில்ஒருவேளை தங்கள் குடும்பத்திற்கு உதவிகரமான வேலைகளைச் செய்யக்கூடும்: அல்லது குடும்பத் தொழில்களைக் கற்றுக் கொள்ளலாம். அவர்களுடைய உழைப்பின் மூலம் உடனடியாகக் கிடைக்கும் அனுகூலத்தை கிராமாந்திரங்களில் பல குடும்பங்கள் இழக்கத் தயாராயில்லாததே அவற்றைச் சேர்ந்த சிறுவர்கள் பள்ளி செல்லாததற்குக் காரணம். ஆனால் இத்தகைய அம்சஙகளைப் பற்றி மேற்குறித்த மாநாட்டில் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ஸெகண்டரி கல்வி கட்டத்துடன் படிப்பை முடிப்பவர்களுக்கு ஏதாவது ஒரு பிழைப்பு கிடைக்கத்தக்கவாறு அக்கல்வி அமைய வேண்டுமென்று மத்திய கல்வி மந்திரி வலியுறுத்தியுள்ளார். தற்போது அத்தகைய நிலைமை இல்லாததால்தான் இளைஞர்களில் பலர் வேறுவழியின்றி கல்லூரிகளில் போய் அடைகின்றனர். உயர்தரப் படிப்புக்கு

ஒரு சிலரே இலாயக்காக இருக்க முடியும். அத்தகையோரை மட்டும் பொறுக்கி யெடுத்து அவர்களுக்கு சர்வ கலாசாலைக் கல்வி அளிப்பதால் அவர்களுக்கும் நன்மையுண்டு; நாட்டுக்கும் க்ஷேமமுண்டு. மற்ற பெருவாரியான இளைஞர்கள் ஸெகண்டரி கல்வியை முடித்தவுடனே, அல்லது அதற்குப் பிறகு இரண்டு மூன்று வருஷங்கள் ஏதாவது ஒரு தொழில் பயிற்சி பெறுவதைத் தொடர்ந்தோ வேலையில் அமர்வதற்கு வசதி இருக்கவேண்டும். தற்போதுள்ள அத்தகைய பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை போதியதன்று நம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப நமது இளைஞர்கள் தொழில் பயிற்சி பெறவும், அதே நோக்குடன் ஸெகண்டரி கல்வி அமையவும் கல்வியாளர்கள் பொருளாதாரத் திட்ட அமைப்பாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தை மத்திய மந்திரி வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு படித்துத் தேறும் மாணவர்களுக்கெல்லாம் வேலை கிடைப்பதெனில் அவ்வளவுக் கவ்வளவு நாட்டில் தொழில்கள் பெருக வேண்டும். அத்தகைய தொழில் வளர்ச்சிக்கு முற்றிலும் அனுகூலமான முறையில் தங்களது தற்போதைய தொழில் கொள்கை அமைந்திருக்கிறதா என்பதை சாக்கார் ஆராய்வரா?

— சுதேசமித்திரன்,
10-8-'59 தலையங்கம்.

'ஆரம்பக்கல்வி ஆபீஸ்,'

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

*

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

*

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. P. 50 பாரங்களுக்கு 26 n. P 75 பாரங்களுக்கு 41 n. P. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

விழா அமைத்த பாதை

செல்வன்

முக்தாயி மகன் மருதன் பட்டாளத்திலிருந்து திரும்பியதும், சிப்பாய் உடைகளை அணிந்து கொண்டு தன் கிராமத்தில் சுற்றி வருவது வழக்கமாகிவிட்டது. காக்கிச்சட்டை, சிகப்புக் குல்லாய் இவற்றுடன் கடை வீதியில் மருதனைக் கண்டவர்களுக்கு, காளிகோயிலுக்கு எதிர்ப்புறம் 'கைரேகை பார்க்கப்படும்' என்று சிறு அட்டையில் எழுதிவைத்துக்கொண்டு இரண்டு மூன்று ஏட்டுப் பிரதிகளை விரித்து வைத்துக்கொண்டிருக்கும் 'ஜோசியர்' ஐயாவின் நினைவு தொடர்ந்து வரும். நாட்டு மக்களின் விதியை நிர்ணயிக்கும் சிப்பாய் இருக்கையில் இவர் எதற்கு என்ற எண்ணமோ என்னவோ!

சண்டை முடிந்து வீட்டிற்குத் திரும்பும் பொழுது, அவன் சேவையை மெச்சி அரசாங்கம் அவனுக்களித்த கொஞ்சம் பணம், அவனுக்கென ராணுவத்தில் அளிக்கப்பட்ட காக்கிச் சட்டை, கருப்புப் பூட்ஸ், சிகப்புக் குல்லாய் இவைகள்தான் அவனுக்கிருந்த செல்வம். பட்டாளத்தில் பணியாற்றினோமே, பட்டி தொட்டிகளில் வேலை செய்யலாமா என்ற 'அசட்டுக் கௌரவம்' இவற்றுடன் கிராமத் தெருக்களில் வலம்வரும் அவனைக் காணக் கிராமத்து இளம் பெண்கள் ஆவல்கொண்டதில் வியப்பில்லை. கடைத்தெருவுக்கும், வேலைவெட்டி செய்யவுமாகக் கிளம்பும் இளம்பெண்கள், தங்களைச்சுற்றி ஈக்கள் போல் மொய்த்து வழக்கமாக வரும் வாலிபர்களைச் சட்டை செய்யாது மருதனைத் தங்கள் ஓரக்கண்களால்பார்த்துப் பூரித்துப்போவது வழக்கம்.

மருதன் தன் பட்டாளத்து அனுபவங்களைக் கொஞ்சம் மிகைப்படுத்திப் பெருமையுடன் கிராமத்தவர்களுக்குச் சொல்வான். வாய் கதை சொல்லிக்கொண்டிருக்கும், கண்கள் மாத்திரம் எங்கோ, யாரையோ எதிர்பார்ப்பது போல் தேடிக்கொண்டிருக்கும். பாவம்! அவன் எதிர்பார்த்த 'அவள்' வரவேயில்லை. செல்லிக்குக் கல்யாணம் பேசி முடித்துவிட்டார்கள். மாப்பிள்ளை கருப்பன்; கொஞ்சம் பசையுள்ளவன். தன் தகப்பன் விட்டுச் சென்ற காணிநிலத்தையும், கடையையும் வைத்து நன்றாகப் பராமரித்து வந்தான். தான் எதிர்பார்த்த செல்லி வராததன் காரணம் புரிந்துவிட்டது மருதனுக்கு. இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் மருதனின் உள்ளம் கொதித்தது. கருப்

பனைத் தீர்த்துக்கட்டக்கூட முடிவு செய்துவிட்டான். நலல வேளையாக அபபடி ஒன்றும நேரவிலலே.

பட்டாளத்தில் இருக்கும் பொழுது அவன் கற்றுக்கொண்ட சில பாட்டுகளை செல்லியின் வீட்டிற்கு எதிரில் நின்று கொண்டு ஒவ்வொரு நாளும பாடுவான். "தனியாக நின்று கொண்டு தானே மாதிரிக் கத்து கிறனே, முத்தாயிடம சொல்லி இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்" என்று சொலலிககொண்டனர் ஊா மக்கள்.

மாமன் வீட்டிற்குச் சென்று திரும்பிவந்த செல்லி தற்செயலாக ஒருநாள் மருதனை வழியில் கண்டாள். சந்திப்பு எதிர்பாராததாக இருந்தாலும செல்லியின் முகத்தில் ஒருவித பரபரப்பையும் காணவில்லே. எதோ முன் பின் பழக்கம் இல்லாத ஒரு வரைப் பாரப்பது போலவே தோன்றியது.

"செல்லி, ரொம்பநாளேக்கப் பரம் உன்னேப் பார்க்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா!"

"முத்தா! நீ அங்காளம்மன் திருவிழாவுக்கு முந்தியே வந்து விட்டேன்னு சொன்னுங்கோ."

"எங்கிட்டக் கூடத்தான் என்ன என்னமோ சொன்னுங்க. ஆமா செல்லி, நீ என்ன அந்தக் கருப்பனேத்தான் கட்டிககப் போறியா?"

"நான் என்ன செய்யறது மருதா! நீ தான் பட்டாளத்துககுப் போயிட்டே; இனித் திருமபமாட்டேன்னு எல்லாரும் சொல்லி, எனக்கு வயசாசசு, சீக்கிரம் கட்டிக்கொடுத்துடனும்னு 'அவருககுப் பேசி முடிச்சுட்டாங்க. கல்யாணத்துக்குத் தேதிகூட வச்சிட்டாங்க. மருதா! நீ அவசியம் கல்யாணத்துசகு வருவேல்ல?"

இந்த வார்த்தைகளே அவள் வாய் கூறியதே தவிர உள்ளம் எதை எதையோ நினேத்து குமுறிக்கொண்டிருந்தது. கண்களிலிருந்து கட்டுககு மீறிவரும் கணணீர்த்துளிகளே அடக்க முந்தானேயை இழுத்துத் துடைத்துக் கொண்டாள்.

"செல்லி, எவ்வளவு தொலேவிலிருந்து நான் இதுக்குததானு வநதேன். இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சா பட்டாளத்திலேயே உசிரவிட்டிருப்பேன்." மருதன் எவ்வளவோ முயன்றுபார்த்தும் முடியாமலே இந்த வார்த்தைகளே உதிர்த்து விட்டான். உணர்ச்சிப் பெருக்கில் உள்ளம் உடைந்து வார்த்தைகள் வழிநதோடின. தொண்டை கம்மியது. தன் முகத்தைத் மறு பக்கம திருப்பிககொண்டு நின்றுன்.

"மருதா! நம்ப ரெண்டுபேரையும் யாராவது பார்த்தா என்ன நினேப்பாங்க. நான் சீக்கிரம் போகணும்."

"உண்மைதான். நீ இப்போது கருப்பனைக் கட்டிக்கப்போற. அவனுக்குக் கையில் நாலுகாசு இருக்கு. ஆனா எங்களுக்கிருந்த கொஞ்சம் காட்டையும் நான் பட்டாளத்திலிருக்கும் போது, அம்மா வித்து வயித்தைக் கழுவிடுச்சு. சின்னஞ்சிறிசிலே நாம் ஆடிப்பாடி விளையாடும்போது, உங்க அம்மாவும், எங்க அம்மாவும் நம்மிருவர் திருமணத்தைப் பற்றியும் பலவிதமாகப் பேசி மகிழ்ந்தனர். நான் வயதுவந்து பட்டாளத்துக்குப் போவதற்கு முதல் நாள் செல்வி! என் வாழ்க்கையில் என்றென்றும் மறக்க முடியாத அந்நாள். கிராமத்திலிருந்து பட்டணத்துக்குப் போவதற்குப் பாஸ் அனுப்பியிருந்தார்கள் பட்டாளத்தார். என்னையொத்த இளம்வயதினர்கள் வயல்களிலும் வீடுகளிலுமாக உழைத்துக் கிடப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழும் பொழுது பட்டாளத்துக்குச் சென்று 'மேஜராக' வந்து கை நிறையச் சம்பாதித்து, கண் நிறைந்த வாழ்க்கை நடத்தலாம் என்று கனவுகண்டு பெருமிதத்துடன் இருந்தேன். நான் செல்ல இருந்த செய்திகேட்டு வந்து என்னைக் கடிந்து செல்வி! நீ சிந்திய கண்ணீரும், வெந்த உன் உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய வார்த்தைகளும் என்றும் என்னால் மறக்கமுடியாது. நான் பட்டாளத்திலிருந்து சீக்கிரமே திரும்பிவந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று உறுதி கூறின பிறகு உன் குமுறலும், கொந்தளிப்பும்; சிறிது சிறிதாக அடங்கியது. கடைசியாகப் பிரியும் நேரத்தில் நீ உன்னுடைய மோதிரம் ஒன்றை எனக்கு உன் நினைவாகக் கொடுத்தாயே! பெற்ற தாயையும், பிரியத்துக்குரிய உன்னையும் பிரிந்து சென்ற அந்த இரவு நீ எனக்களித்த உன் நினைவுச்சின்னம், இவற்றை நினைத்து எங்கோ தொலைதூரத்தில் நம் ஊரையும் கேள்விப்பட்டிராத மக்கள் மத்தியில், உலகின் ஒரு கோடியில் நான் எத்தனை தடவை கண்ணீர்சிந்தியிருப்பேன் தெரியுமா? செல்வி! இனிமேல் நீ வேறு ஒருவனுக்கு மனைவியாகப் போகிறவள். எனக்கும், உனக்கும் உள்ள சொந்தம், பந்தம் எல்லாம் மாய்ந்து மடிந்து, உருக்குலைந்து, தேய்ந்த கனவாகப் போய்விட்டன. சென்றுவா செல்வி!"

செல்விக்கும், கருப்பனுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு செல்வி முன்போலல்லாமல் அடிக்கடி வெளியே சென்றுவருவதால், மருதனுக்கு அவளைப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. என்னதான் அடக்கிப்பார்த்தும் மருதனின் மனம் அடங்கவில்லை. அந்திப் பொழுதில், மருக்கொழுந்தோ, மல்லியோ தலையில் சூடி, இளமையின் எழில் கொல்லையாகச் செல்வி இடுப்பில் குடத்தையெடுத்து தண்ணீருக்குச் செல்கையில் மருதனின்

உள்ளம் உவகையில் குளித்துப் பின் கொதிக்கும் எரிமலையாக மாறுமளவிற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்த்துப் பெருமூச்செறியும். கருப்பன் செல்விக்கென வாங்கிக்கொடுத்த அந்தச் சிவப்புக்கல் மோதிரம்—அதைக் காணும்தோறும் மருதனுக்கு என்னவோபோலிருக்கும். பாவம்! மருதன் செல்வியை அறவே மறப்பதற்கு எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. எதிர்பாராமல் அவளைக் காணும் இடத்தில் எல்லாம் செல்வியின் உருவம் அவன் உள்ளத்தில் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாக அவன் உள்ளத்தைத் தின்றுகொண்டேயிருந்தது.

"எப்படியாவது செல்வியை அந்தக் கருப்பனிடமிருந்து பிரித்துவிடவேண்டும்" என்று கருவிக்கொண்டிருந்தான்.

கருப்பனின் வீட்டிற்கு எதிர் வீட்டில் காத்தான் வசித்து வந்தான். கருப்பனளவு காணி நிலம் இல்லாவிடினும், வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டிப் பிழைக்கவேண்டிய நிலையில் இல்லை. ஏதோ கொஞ்சம் இருந்தது. தன் மகள் மாரியம்மாவை கொஞ்சம் பசையுள்ளவனாகப் பார்த்துப் பிடித்துக்கொடுக்க வேண்டும் என்பது அவனது நீண்டநாள் நினைவு. காத்தானிடம் வேலைக்குச் சேர்ந்துவிட்டான் மருதன். செல்வியின் நினைவால் உள்ளம்வாடி உணர்ச்சி குன்றிக்கிடந்த மருதனுக்கு மாரியம்மாவைக் காண்பதில் ஒருவித சாந்தி ஏற்பட்டது. மாரியம்மாவைத் தனியாகச் சந்திக்கும் பொழுது விளையாட்டாக ஏதாவது பேசுவான். உண்மையாகவே மருதன் தன்னைக் காதலிப்பதால் தான் இவ்விதம் எல்லாம் பேசுகிறான் என்று மாரியம்மா நினைத்துக்கொண்டாள். ஆகவே, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் மருதனைத் தனிமையில் சந்திக்கத் தவறுவதில்லை. மருதன் தன் தங்கையுடன் பழகும் நினைப்புடனே தான் மாரியம்மாவிடம் பழகி வந்தான்.

எதிர்வீட்டில் இருந்த செல்வியும் எப்படியாவது மருதனுக்கு மாரியம்மாவைக் கல்யாணம் செய்து வைத்துவிடவேண்டும் என்று முயன்றாள். இதற்காக அவள் அடிக்கடி மாரியம்மாவைக் கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் மருதன் மாரியம்மா வீட்டிலிருப்பதால் அவனைப் பார்ப்பதற்குத்தான் செல்வி அங்குச் செல்வதாகவும், மாரியம்மா மூலம் செய்தி அனுப்புவதாகவும் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். "குசுகுசு"வென ஓரிருவர் கண்டும் காணாமலும் பேசிக்கொண்டிருந்த அந்தச் செய்தி அதற்கு உரிய முழுப்பண்புடன் இறக்கை, கால், கை முதலியவை முளைத்து கொட்டிப் பட்டிக் கிராமத்து மக்களின் அன்றாடப் பொழுதுபோக்குப் பேச்சாக மாறியது.

மருதனுக்கு மனவேதனை அதிகரித்தது. அதிகம் படிக்கவில்லை அவன். ஆனாலும் படிப்பால் ஏற்படும் அறிவைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான அறிவைப் பெற்றிருந்தான் தன் பட்டாளத்துச் சேவையினால். பட்டாளத்திலிருக்கும் பொழுது எவ்வளவோ இடங்களுக்குச் சென்றிருக்கிறான். வெவ்வேறு மொழி பேசும் மக்கள், பல்வேறு விதமான வாழ்க்கையையுடையவர்கள், பலதிறப்பட்ட பண்புள்ளவர்கள் இவர்களுடன் பழகியிருக்கிறான். அவையெல்லாம் சுற்றித்திரிந்தது அவன் உணர்ச்சியைக் கொஞ்சங்கூட அடக்க உதவவில்லை.

செல்லிக்கு மணமாகி எங்காவது கண்காணாத இடத்துக்குச் சென்றிருந்தாலாவது மருதன் ஒருவாறு தன் உணர்ச்சியை அடக்கி, ஏமாற்றத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக மறந்திருப்பான். செல்லியின் கணவனோ கள்ளம் கபடு அறியாத சின்னஞ் சிறு வயதிலிருந்து மருதனுடன் ஒன்றாக ஓடி ஆடிப் பழகியவன். பள்ளிப்பருவத்தின் பாதியில் இருவரும் தங்கள் படிப்புகளை முற்றுப்புள்ளிவைத்துவிட்டு 'குலத்தொழில்' செய்ய ஆரம்பித்தனர். தன் தந்தையார் விட்டுச்சென்ற கொஞ்சம் மூலதனம், இடைவிடா உழைப்பு, தொழிலுக்குத் தேவையான சூழ்நிலை இவற்றால் முன்னுக்கு வர முடிந்தது கருப்பனால். ஆனால் மருதனோ என்னதான் உழைத்தும், உழைப்பின் பலனை அப்படியே அனுபவிக்க முடியாது போயிற்று மூலதனம் இல்லாத காரணத்தால். உழைப்பிற்குக் கிடைத்த கூலியோ தன் வயிற்றையும், பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாயின் வயிற்றையும் கழுவப் போதுமானதாக இல்லை. எனவேதான் பட்டாளத்தில் சேர்ந்தான், பசியார உண்ணும் நோக்கத்துடன்.

கண்ணுக்கெதிரே தான் காதலித்தவள் மற்றொருவனுடன் செல்வதைக் காணும்போதும் மருதனின் மனம் ஆத்திர அலைகளால் தாக்கப்பட்டு அலைமோதியது. ஆனால் கருப்பன் எப்பொழுதும்போல் மருதனைக் கண்டால் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். ஊராரின் உரையாடல் கருப்பனின் உள்ளத்தைச் சிறிதளவும் தாக்கவில்லை. ஆனால் மருதனின் மனம் மட்டும் படாதபாடுபட்டது. கருப்பனைப் போல் மனம்விட்டுப் பழக அவனால் முடியவில்லை.

வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி செய்தால் நிறைய லாபம் வரும் என்று கருதி அதற்காக வெங்காயக் கொள் முதலுக்கு வெளியூர் போக வேண்டியிருந்தது. கருப்பன் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்தில் இந்தப் பயணத்தைத் தானே மேற்கொண்டான். மருதனின் மனம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் துடியாய்த் துடித்தது

செட்டியபட்டி 'மஞ்சுகவிரட்டு' என்றால் அந்த வட்டாரத்தில் மிகப் பேர்போனது. பட்டணத்தில் ''பொருட்காட்சி', 'கண்காட்சி', 'காளைக் கண்காட்சி' நடப்பதைப்போல ஆண்டுக்கொருமுறை கிராமங்களில் 'மஞ்சுகவிரட்டு' அல்லது 'ஜல்லிக்கட்டு' என்று அழைக்கப்படும் 'மாடுபிடிக்கும்' பந்தயம் நடைபெறும். இந்தப் பந்தயதினத்திற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே கிராமங்களில் பேச்சு நடைபெறும். ஊர்ப் பெரியதனக்காரர்கள் ஒன்றுகூடித் தலைக்கு இவ்வளவு, என்று வரிபோட்டு, அத்துடன் ஊர்ப் பொதுப்பணத்திலிருந்து கொஞ்சம் அதற்கென ஒதுக்கி இந்தப் பந்தயத்தை மிகச் சிறப்பாக நடத்தப் பெரும் நடவடிக்கைகள் எடுப்பது வழக்கம். பந்தயக்காளை வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் காளையை நன்றாக வளர்ப்பார்கள். வயதடைந்த வாலிபர்கள் பந்தயக் காளையைப் பிடிப்பதில் போட்டி போடுவதும் உண்டு. போட்டிக்கு முதல்நாள் காளையின் கொம்புகளைக் கூர்மையாகச் சீவி, எண்ணெய் தடவி, காளைக்குஞ்சம், ஜரிகை முதலியவைகள் கட்டி அழகுபடுத்தி வைப்பார்கள். பந்தயதினத்தன்று இரண்டு நீண்ட கயிறுகளை இருபக்கமும் பிடித்துக்கொண்டு, நடுவில் கழுத்து மணியசைய குஞ்சம் காற்றில் அசைந்தாட காதுகளை நிமிர்த்தி ராஜநடைபோட்டுவரும் பந்தயக்காளைகளைப்பார்ப்பதற்குச் சிறுவர்கள் ஆவலோடு வீட்டுத் திண்ணையில் வந்து நிற்பார்கள். இந்த நாளைப் பயன்படுத்திக் கொண்டு எப்படியாவது செல்வியைக் கருப்பனிடமிருந்து பிரித்துக்கொண்டு போய்விடவேண்டும் என்று முடிவு செய்தான்.

செல்விக்கு எதிர் வீட்டில் தனக்காகத் தன்னையே நினைத்து உருகும் மருதனைப் பார்த்துப் பேசி எப்படியாவது மாரியம்மாவை அவனுக்குக் கட்டி வைத்துவிடவேண்டும் என்ற ஆவல். அதற்காக மருதனுடன் தனியாகப் பேசும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். மருதனை அழைத்துவர ஆள் அனுப்பினாள். மருதன் தன் கனவு கனவாகப் போகிறது என்றெண்ணி எப்படிப் பேசுவது, இங்கிருந்து போய் எங்குத் தங்குவது, வயிற்றுப் பிழைப்பிற்கு என்ன செய்வது என்று சங்கிலித்தொடர் போல் ஒன்றன்பின் ஒன்றாய் வந்த கேள்விகளுக்கு விடை தேடுவதில் ஈடுபட்டான்.

மருதன் வந்ததும் வரவேற்று உபசரித்தாள் செல்வி. நினைப்பெல்லாம் மாரியம்மா, மருதன் திருமணத்தை முடிப்பதைப் பற்றியே இருந்தது. பேச்சென்னவோ 'மஞ்சுவிரட்டு' பற்றி ஆரம்பமாகியது. மருதன் எதிர்பார்த்த வாய்ப்பு கிடைத்துவிட்டது. வழி தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்த அவனுக்குச் செல்வியே வழி திறந்துவிட்டாள்.

"மருதா எனக்கு ரொம்ப நாளா ஆசை, மஞ்சுவிரட்டுப் பார்க்கவேண்டுமென்று. போகலாம் நாம் ரெண்டுபேரும்" என்றாள் செல்வி.

மருதனுக்கு உள்ளூர ஆசை இருந்தாலும், வெளிப்பேச்சுக்காகக் கேட்டான். "என் செல்வி என்கூட வந்தா உன் புருஷன் ஏதாச்சும் சொல்வாரு’ என்றான்

"அதெல்லாம் ஒன்னுமில்லே, மருதா. என் புருஷனுக்கு ரொம்ப நல்ல மனசு. நம்மைப்பத்தி ஊரிலே பேசிக்கிறதைக் கேட்டுப்பிட்டு ஒருநாள் சொல்லிச்சு, 'பாவம், மருதன் நல்லவன். சின்ன வயசிலே இருந்து என்கூட ஒன்னா பழகினவன். அவன் மேல் பழிபோடறாங்க செல்வி, நீ ஊருல சொல்றாங்களேன்னு அவன்கூடப் பேசாம, இசாம இருந்துடாதே கண்டா எப்பவும்போல சகஜமாகப் பேசிக்கோன்னு' சொல்லிச்சு."

"என்ன! செல்வி! கருப்பன் அப்படியா சொன்னான்? உண்மையாகவா?"

"ஏன் மருதா இப்படிக் கேட்கிற நிசமாத்தான். எப்பப்பாத்தாலும் நீங்க ரெண்டுபேரு ஒண்ணாச் சுத்திக்கிட்டே இருந்ததைப் பத்திபல்லாம் கூடச் சொல்லும். உண்மையாகவே உன்மேல் ரொம்ப பிரியம் அதுக்கு" இதைச் சொல்லி முடிப்பதற்குள் மருதனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. செல்விக்குத் தெரியாமல் தன் கைகளால் துடைத்துக்கொண்டே "ஆமாம், செல்வி கருப்பண்ணு எனக்குக் கரும்பு மாதிரி" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்துவிட்டான். "மருதா, மருதா" என்று செல்வி கத்துவது அவன் காதில் விழவில்லை. வீட்டை விட்டு வெளியே வந்தான். வீடு, தெருக்கோடி, ஊரின் எல்லை, எல்லாம் கடந்து நடந்து கொண்டே இருந்தான் மருதன்.

—"மன்றம்"

வானவெளியிலும் பெரிய கப்பல்களை விட முடியுமாம்!

அணு ஆயுதத்தை உபயோகிக்க யு. எஸ். விஞ்ஞானிகள் முயற்சி

கடலில் பிரயாணம் செய்யும் கப்பல்களைப் போலவே வானவெளியிலும் ஆகாயக் கப்பல்களை விட அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டு வருகின்றனர். அணுகுண்டை உபயோகித்து இந்த ஆகாயக் கப்பல்களை விட அவர்கள் யோசித்து வருகின்றனர். நியூயார்க் டைமஸ் பத்திரிகை இதைகவலை வெளியிட்டிருக்கிறது.

இதற்காக ஆரம்பப் பயிற்சிகள் நடத்தியதில் வெற்றிக்கான சாத்தியக்கூறுகள் கிடைத்திருக்கின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

★ மருது பாண்டியர் ★

—[தாமரைக் கண்ணன்]—

காட்சி 39

காளையார் கோவில் காடு

(நடந்து வந்த களைப்பால், கண்ணம்மா ஒரு மரத்தடியில் அமர்ந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு, கூழைக் குடிப்பதற்காகக் கலயத்தின் மூடியை அவிழ்த்து அதன் விளிம்பை ஆவலோடு வாயருகில் எடுத்துச் செல்கிறாள். அப்போது......பெருமூச்சு விட்டபடியே முத்தப்பனைத் தோளில் சுமந்து கொண்டு, பசியால் தள்ளாடியவாறு சின்னமருது வருகிறான். அவனால் நடக்கவே முடியவில்லை. சிறிய கல் ஒன்று இடறியதால் கீழே விழுந்து உணர்விழந்து விடுகிறான். 'யாரோ' என்ற எண்ணத்துடன் கண்ணம்மா, கலயத்தைக் கீழே வைத்துவிட்டு எழுந்து ஓடிச் சென்று பார்க்கிறாள்... திடுக்கிடுகிறாள்......)

கண்ணம்மா :—சாமி...சாமி...! அய்யோ கடவுளே! யானைமேலே அம்பாரி கட்டி அமர்ந்துவர வேண்டியவர், பசியால் களைச்சு உணர்வில்லாம கிடக்கிறாரே...இது எந்த தெய்வத்துக்கு அடுக்கும்...சின்ன அய்யா...சின்ன அய்யா! சாமி...! சாமி...!

(முகத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ஓடிச் சென்று கலயத்தை எடுத்து வந்து, கூழை அவன் வாயில் புகட்டுகிறாள். சின்ன மருது சற்று நேரங்கழித்து உணர்வு பெற்று மெல்ல எழுந்து அமர்கிறான்.)

சி. மருது :—நீ யார் அம்மா...?

கண்ணம்மா :—என் பெயர் கண்ணம்மா, சாமி...!

சி. மருது :—பொருத்தமான பெயர், அம்மா! துன்பப்படுவோரின் துயரைப் போக்குவதில் நீ கண்போன்றவள். பசியால் போக

இருந்த என் உயிரைப் பிடித்து நிறுத்திய நீ எனக்குக் கண் தான், அம்மா!

கண்ணம்மா :—இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க, சாமி...!

சி. மருது :—இரு, கண்ணம்மா! முத்தய்யனுக்குக் கொடுக்கலாம்...!

(கவனம் வரப்பெற்றவனாக, முத்தய்யன் அருகில் சென்று பார்க்கிறான்.)

சி. மருது :—(துடிப்புடன்) முத்தய்யா...! முத்தய்யா...!!

கண்ணம்மா :—(அருகே சென்று, பார்த்து) ஆ...முத்த'ண்ணாவா? அண்ணாச்சி...அண்ணாச்சி......

(முத்தய்யனைப் புரட்டிப் பார்க்கிறார்கள். அந்த நல்ல மனிதனின் மூச்சு நின்றுவிட்டிருக்கிறது.)

கண்ணம்மா :—அட கடவுளே! இந்தப் பாழாய்ப்போன காட்சியைப் பார்க்கவா என்னை உயிரோடு வைச்சிருந்தே......என் கண்கள் இன்னும் அவியலையே...அட பாழுந் தெய்வமே...!

சி. மருது :—(கண்களில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டே) அழாதே, கண்ணம்மா! இந்த நன்றி கெட்ட உலகத்தில் நல்லவர்கள் முடிவே இப்படித்தான் பரிதாபகரமானதாக இருக்கிறது.

(திடீரென்று நான்கைந்து சிப்பாய்களுடன் கர்னல் வெல்ஷ் வருகிறான்.)

வெல்ஷ் :—நான் ஆமோதிக்கிறேன், மிஸ்டர் சின்ன மருது!

(...என்று சொல்லிக் கொண்டே, வளரித்தடியால் மருதரசனின் வலது தொடையில் ஓங்கி அடிக்கிறான். மருது தரையில் சாய்கிறான். நிராயுதபாணியாக எழுந்து நிற்க முயலும் மருதுவின் மார்பில் ஈட்டி முனைகளைப் பதியவைத்து நிற்கின்றனர், சிப்பாய்கள். எதிர்பாராத தாக்குதலால் அதிர்ச்சி யடைந்த கண்ணம்மா ஒருவனுடைய ஈட்டியைப் பிடுங்கிக் கொண்டு, பயங்கரமாகக் கத்துகிறாள்.)

கண்ணம்மா :—(ஆவேசத்துடன்) என் உயிர் இருக்கும் வரை எங்க ராசாவை நெருங்காதீர்கள்; நெருங்கினால் பிணமாகிவிடுவீர்கள்!

வெல்ஷ் :—யார் இவள், இடியட்.....!

(கைத் துப்பாக்கியால் அவளைச் சுடுகிறான். கண்ணியமே உருவான அந்த வீராங்கனை சுருண்டு விழுகிறாள். ஆனால் அவள் எறிந்த ஈட்டி வெல்ஷின் மார்பில் தைத்து விடுகிறது; இரத்தம் கொட்டுகிறது, மார்பிலிருந்து.)

வெல்ஷ் :—(மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டு)...ம்...அவரைக் கைது செய்யுங்கள்!

(சிப்பாய்கள் மருதுவின் கைகளில் விலங்கைப் பூட்டுகின்றனர்.)

சி. மருது :—(சீற்றத்துடன்) வெல்ஷ்.....

வெல்ஷ் :—சீறவேண்டாம், மிஸ்டர்...! சின்ன மருதுவின் தோழனாக இருந்த வெல்ஷ் செத்துவிட்டான்.

சி. மருது :—தெரியுமே, எனக்கு! நான்காயிரம் பணத்திற்காக நீ எப்போதோ நன்றி கெட்டவனாக மாறிவிட்டாய்...நமக்குள் இருந்த நட்பை என்றைக்கோ கொன்றுவிட்டாய்...!

(வெல்ஷ் தலைகுனிந்து மெல்ல அப்பால் நகர்ந்து செல்கிறான். மருதரசன், மானத்திற்காக உயிர் துறந்த கண்ணம்மா. முத்தய்யன் ஆகிய இருவர் உடல்களுக்கருகில் சென்று மண்டியிட்டு தன் கடைசி வணக்கத்தைச் செலுத்திவிட்டு. அத் தீயோர் நடுவண் சிங்க ஏறு என நடந்து செல்கிறான்.)

காட்சி 40

காளையார் கோவில் காடு

கண்ணம்மா இறந்த இடம்.

(குண்டனும், குறுணியும், மனம மாறுபட்டுக் கண்ணம்மாவைத் தேடிக்கொண்டு வந்த கறுத்தானை அழைத்து வருகின்றனர்.)

குண்டன் :—ரொம்பவும் நல்லவங்க அந்த ஆச்சி! நேற்று உச்சிப் பொழுதுக்கு நாங்க கூழ் கஞ்சி கொடுத்தனுப்பினோம். மாலையில் ஆடு ஓட்டி வர்றப்போ இந்தக் கோரத்தைப் பார்த்தோம். (கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) இதோ...இந்த அம்மாவா பாருங்க......

கருத்தான் :—(பிணத்தைப் பார்த்துவிட்டு,) ஆமாம் இவளேதான். கண்ணம்மாவேதான்......

(குண்டனும் குறுணியும் தேம்பித் தேம்பி அழுகின்றனர்)

கருத்தான் :—(மனங் கதறி) கண்ணம்மா...கண்ணம்மா...! என்னால் தானே நீ இந்த நிலைக்கு ஆளாயிட்டே...உன்னை கண்ணின் கருமணியாய்...கற்பூரப் பெட்டகமாய் போற்றி வந்தேனே...! என் வாழ்வின் வழிகாட்டியாய்.....வழி காட்டும் ஒளிவிளக்காய்தான் நீயும் என்னைக் கண்காணிச்சு வந்தே...! எப்படியோ நான பறங்கிக்காரனுக விரிச்ச வலையில் விழுந்துட்டேன். புத்தி தடுமாறி, உன்னை வாயில் வந்தபடி பேசினேன்; என் கைநோக அடிச்சேன்...பணத்திற்கு ஆசைப்பட்டு உன் மனம் புண்ணாகும்படி உன்னை நடத்தினேன். அப்போதுகூட நீ படிச்சு படிச்சு சொன்னே...பாவி நான்...கேக்காமே போயிட்டேன்! நான் கல் நெஞ்சக்காரன்...எனக்கு நல்ல புத்தி வரணும்னு நீ உன்னையே தியாகம் செஞ்சுட்டியா, கண்ணம்மா!

இப்போது, நான் நல்லவனாக மாறி வந்திருக்கிறேன், கண்ணம்மா! நீ என்னை விட்டுப் பிரிந்ததுமுதல், என்னையறியாமலேயே தாய் நாட்டுப் பற்று என் உள்ளத்தில் எழுந்தது. நம்ம தமிழ் சாதி...நம்ம தமிழ் மண்ணு...நம்ம தமிழ் இனம் என்ற உணர்ச்சிகள் தோன்றின. நான் சொந்த புத்தி உள்ளவனாக...சுயமரியாதை உள்ளவனாக மாறிவிட்டேன்! இப்போது என்னிடம் பேசு கண்ணம்மா...பேசமாட்டாயா? உன் கண்களைத் திறந்து என்னைப் பார் கண்ணம்மா...பார்க்கமாட்டாயா? இனத் துரோகியான நம் கணவனை எந்த முகத்தோடு பார்ப்பது என்ற எண்ணத்தால் கண்களை மூடிக்கொண்டாயா, கண்ணம்மா! அய்யோ...! கொடியவனின் குண்டுபட்டு, நீ குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தபோது உன் பேதை நெஞ்சம் எதை எதை நினைத்ததோ...ஆவி பிரிந்த நேரத்தில் எப்படி எப்படித் துடித்தாயோ.....

(கதறிக்கொண்டே அவள் பிணத்தின் மீது விழுகிறான். அவன் கண்ணெதிரில்

முத்தையன் பிணம் தென்படுகிறது. எழுந்து சென்று, முத்தையன் கால்களைக் கட்டிக்கொண்டு, 'முத்தையா...முத்தய்யா... உத்தமனே...' என்று கதறிக் கண்ணீர் விடுகிறான். இரண்டு பறங்கி சிப்பாய்கள் வந்து கறுத்தான் கைகளைப் பற்றி இழுத்துப் போகின்றனர். குண்டனும் குறுணியும் தமது கந்தல் துணியால் தங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்கள்.)

காட்சி 41

சிறைச்சாலை

(கைகளில் விலங்கிடப்பட்டு சின்ன மருது சிறையில் உள்ளான். வளரித் தடியால் தாக்கப்பட்டு முறிந்துபோன அவன் வலது தொடையில் கட்டு கட்டப்பட்டுள்ளது. சரியாக நிற்கமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறான். அப்போது, கர்னல் வெல்ஷ் தன் மார்பில் பட்ட புண்ணுக்கு மருந்து இட்டுக்கொண்டு வருகிறான்.)

வெல்ஷ்,—வணக்கம், மிஸ்டர் சின்ன மருது...!

(சின்ன மருது கர்னலின் முகத்தை ஆழ்ந்து பார்த்து மெல்லப் புன்னகை புரிகிறான்.)

சி. மருது :—நலமா, தோழரே!

வெல்ஷ் :—(கம்மிய குரலில்) உடல்தான் நலம்; உள்ளம் நைந்து கிடக்கிறது.

சி. மருது :—(குத்தலாக) ஏன்? என்னைப் பிடித்துக் கொடுத்தால் உமக்குக் கிடைக்கவேண்டிய நாலாயிரம் பொன்னும், சாதாரண சிப்பாய்களுக்குப் போய்விட்டதே என்ற குமைச்சலா......?

வெல்ஷ் :— இல்லை...!

சி. மருது :—சிவகங்கை சேர்வைக்காரன் சின்ன மருதுவை நண்பன் என்றும் பாராமல் கைது செய்ய நேர்ந்ததே என்ற சோகமா...?

வெல்ஷ் :—இல்லை...பிரபு...இல்லை......

சி. மருது :—(வேகமாக) வேறென்ன காரணம்? பாய்ந்து வரும் வேங்கையையும் வீழ்த்திய நான் தொடை எலும்பு நொறுக்கப் பட்டு எழுந்து நிற்கவும் முடியாமல் தத்தளிக்கிறேனே என்ற ஆதங்கமா? வேலையும் வில்லையும் தாங்கி வீரப்போர் புரிந்த என் கைகளில் இரும்பு விலங்கு பூட்டப்பட்டிருக்கிறதே என்ற அனுதாபமா..? அழகான சிம்மாசனத்திலே அமரவேண்டிய சிவகெங்கைச் சீமான் சிறைக் கூடத்தில் சீரழிந்து கிடக் கிறேனே என்ற சிந்தாகூலமா...? இந்தக் காரணங்களும் இல்லையென்றால் பொன்னுக்காகவும் பதவிக்காகவும் ஆசைப் பட்டு நட்பைக் கொன்றுவிட்ட மாபாதகன் என்று பார்ப்பவர் கள் பழிப்பார்களே என்ற அச்சமா...?

வெல்ஷ் :—(கலங்கும் கண்களுடன்) இ...ல்...லை, தோழரே!

சி. மருது :—(சினத்துடன்) அதுவும் இல்லையென்றால், உமது உள்ளம் நைந்து கிடப்பதற்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்...? நான்...சொல்லுகிறேன்.....

வெல்ஷ் :—வேண்டாம்...நீங்கள் எதையுமே சொல்லாதீர்கள்... எதையாவது சொல்லிச் சொல்லி உடைந்துபோன என் இத யத்தை மேலும் மேலும் உருக்குலைத்து விடாதீர்கள்......

சி. மருது :—இவ்வளவு சங்கடப்படும் நீர் எதற்காக என்னைச் சந்திக்க வந்தீர்......?

வெல்ஷ் :—எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன......ஆனால், எதைச் சொல்வது என்றுதான் தெரியவில்லை...

சி. மருது :—(அலட்சியமாக அவனைப் பார்க்கிறான்.)

வெல்ஷ் :—எனது கீழான செயலால் என் மனமே என் மனதைக் கொல்கிறது.

சி. மருது :—நீரே உம்மைத் தேற்றிக் கொள்ளலாம்......!

வெல்ஷ் :—மன்னிப்புக் கோரி தங்களிடம் வந்தேன்; மன நோய்க்கு மருந்திடுங்கள்......

சி. மருது :—என்னால் முடியாது, தோழரே! எங்கள் சீமையை இழந்த பிறகு, நான் என்னென்ன அனுபவங்களைப் பெற்றேன் என்பது எனக்கே தெரியவில்லை. நான் என்னைப் பற்றியே மறந்துவிட்டேன்; எங்கள் சொந்த ஜமீனை மீண்டும் பெறுவ தற்கு என்னென்ன செய்யவேண்டும் என்று சிந்திப்பதற்குக் கூட சக்தியில்லாமல் இருக்கிறேன்.

வெல்ஷ் :—பகைவனிடமும் அன்பு காட்டும் பண்பு கொண்ட தாங்கள், என்னை எப்படியாவது மன்னியுங்கள்.

சி. மருது :—நான் உம்மை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை

வெல்ஷ் :—ஆ...! இக்கட்டான இந்த நேரத்தில், 'ஆங்கிலேயர்களும் மனித உள்ளம் உள்ளவர்கள் தான்...நானும் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ள விழையும் நல்ல இதயம் படைத்தவன் தான்...என்பதைக் காட்டிக்கொள்வதற்காகத் தங்களிடம் வந்திருக்கிறேன்' என்று தவறாகக் கருதுகிறீர்களா?

சி. மருது :—நீர் எனக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கவில்லை.

வெல்ஷ் :—மறைக்க வேண்டாம், பிரபு! நான் எவ்வளவோ தவறுகளைச் செய்திருக்கிறேன். நான் மதுரையில் சுபேதாராக இருந்தபோது, முத்தய்யன் மூலமாக மூட்டை மூட்டையாக அரிசியும், வண்டி வண்டியாகச் சுவை நரம்பிய பழங்களையும் அனுப்பியிருக்கிறீர்கள்.

சி. மருது :—அவை, நானே திரும்பவும் நினைத்துப் பார்க்கக்கூடாத நிகழ்ச்சிகள். பிறருக்குச் செய்த உதவிகளைப் பட்டியல் போட்டுக் கணக்குக் காட்டும் பழக்கம் எங்களுக்கு இல்லை. யாருக்காவது உதவி செய்தால் அந்தக் கணத்திலேயே அதை மறந்து விடுவோம்; மற்றவருடைய உதவியைப் பெற்றால் இறக்கும் வரை நெஞ்சில் நிறுத்தி வைப்போம்.

வெல்ஷ் :—நான்தான் நெஞ்சில் நிறுத்தி வைக்காத பாவியாகிவிட்டேன்; வெள்ளைக்காரர்கள் விரோதிகளாக இருந்தும், என்னை உள்ளன்புடன் நேசித்துவந்த தங்கள் உயர் குணத்தை மறந்து விட்டேன்.

சி. மருது :—அதற்காக, உம்மைப் பற்றி நான் தவறாக நினைத்துக் கொள்ளவில்லை......

வெல்ஷ் :—யாவற்றுக்கும் மேலாக, தமிழ் நாட்டுப் போர்முறைகளை எனக்குக் கற்றுத் தந்தீர்கள். எந்தக் கலையைத் தங்களிடம் பயின்றேனோ, அந்தக் கலையாலேயே தங்களை வீழ்த்த நேரிட்டது. என்னை யறியாமலேயே ஏதோ ஒரு வெறி கொண்டு, அன்று வளரித்தடியை வீசித் தங்கள் தொடையை முறித்து விட்டேன்......

சி. மருது :—தோழரே! நான் இன்று ஏதோ சிறையில் கிடப்பதால் வேறு வழியில்லையே யென்று உம்மிடம் இவ்வளவு அமைதி

யாகப் பேசி முகஸ்துதி செய்கிறேன் என்று எண்ணிவிடாதீர்! உண்மையிலேயே சொல்கிறேன். நீர் வளரித்தடியைப் பயன் படுத்தும் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன். காரணம், நான் உமது ஆசிரியன், அல்லவா?

வெல்ஷ்:—உண்மைதான்! நான் தங்கள் மாணவன் என்பதை எந்த இடத்தில் வேண்டுமானாலும் சொல்வேன்; யார் முன்னிலையில் வேண்டுமானாலும் ஒப்புக்கொள்வேன்...! உங்களை ஒன்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நான் தங்களைக் கைது செய்தது என் கடமையின் பொருட்டு என்று இந்தக் கோர மான சம்பவத்தை மூடி மழுப்பிவிட நான் ஆசைப்படவில்லை. கவர்னரிடமிருந்து வந்த கண்டிப்பான உத்திரவால் நிராயுத பாணியாக இருந்த உங்களைத் தாக்கினேன். இப்போதுகூட தாங்கள் முயற்சி செய்து இங்கிருந்து தப்பிவிட்டால், ஒரு காலத்தில் உங்கள் நண்பனாக இருந்தேன் என்ற காரணத்தால், என்மீது சந்தேகப்படுவார்கள்; எனக்குத்தான் தண்டனை தருவார்கள். அந்தப் பயத்தால்தான் இப்போது தங்களுக்கு ஒரு சிறு சலுகைகாட்டக்கூட அச்சப்படுகிறேன்.

சி. மருது:—அஞ்சாதீர்கள். சிறு சலுகையைக்கூட உம்மிடமிருந்து நான எதிர்பார்க்கவில்லை.

வெல்ஷ்:—தங்கள் அன்பான மன்னிப்பு எனக்கு உண்டா......?

சி. மருது:—நிச்சயமாக உண்டு; உங்கள் கர்த்தரே உங்களை மன்னிப்பார்!

வெல்ஷ்:—இந்த வார்த்தைகள் தங்கள் வாயிலிருந்து முழுமனத் துடன் வெளி வந்திருந்தால்; நான் உள்ளபடியே ஆறுதல் பெற்றவனாவேன்.

சி. மருது:—நல்ல இதயத்தோடு சொல்லப் போனால், எங்கள் தோல்வி எங்கள் சிறு படையின் பலக்குறைவாலேயே ஏற்பட்டது. அதற்காக, வெற்றியடைந்த உங்களைக்கண்டு பொறுமைப்பட வில்லை; பூசல் கொள்ளவில்லை.

வெல்ஷ்:—தங்களால் நான் ஒருவாறு அமைதியடைகிறேன். சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்ட உதவி ஏதாவது செய்யமுடிந்தால் உங்களுக்கு மகிழ்ச்சியோடு செய்வேன்...!

சி. மருது:—எந்த உதவியும் நான் கேட்கவில்லை. என் ஆருயிர் அண்ணனைப்பற்றியும், அன்பு நண்பர் ஊமைத்துரை பற்றியும்

செய்தி கிடைத்திருந்தால் தெரிவியுங்கள். அதுவே போதும், எனக்கு......!

வெல்ஷ் :— (வருத்தத்துடன்) மருதரசரே! துக்ககரமான அந்தச் செய்தியை மட்டும் என்னைக் கேட்காதீர்கள்.

சி. மருது :— அப்படி யென்றால்......

வெல்ஷ் :— (தலை குனிந்து) அப்படி...யென்...றால்...

சி. மருது :— அவர்கள் பிடிபட்டு விட்டார்களா...?

வெல்ஷ் :— ஆம்...! அக்னியு துரை அவர்களைப் பிடித்துவிட்டார்......

சி. மருது :— (அதிர்ச்சியுடன்) ஆ...ஊமைத்துரை...ஊமைத்துரை

வெல்ஷ் :— (அச்சத்துடன், மெல்ல) மருதரசரே...! பிரபு...!

சி. மருது :— (சிறைக் கம்பிகளில் தலையை மோதிக்கொண்டு) அண்ணா...அண்ணா...! வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடிய உங்கள் வெற்றித் தோள்கள் இன்று எங்கே...அண்ணா! எங்கே அண்ணா, அந்த வெற்றி...? என்னைப்போல நீங்களும் சிறையில் கிடக்கிறீர்களாமே......நெஞ்சமே...! நீ ஏன் இன்னும் வெடித்துப் போகவில்லை...எதற்காக இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறாய்...அய்யோ...அண்ணா...அண்ணா!!

வெல்ஷ் :— (நடுக்கத்துடன்) பிரபு...பிரபு...!

(சின்ன மருது சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறே ஆகாயத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருக்கிறான். அவனுடைய கலங்கிப் போன நெஞ்சத்தைக் கண்டு, கசங்கிய கண்களிடையே கண்ணீர் வழிய, அப்பால் நகர்கிறான்—வெல்ஷ்.)

[தொடரும்]

★ சுவை மிகுந்த நிகழ்ச்சிகள் ★

காதலரே! கடைக்கண் பாரீர்!

ஆறாத காதல் என்பது ஒரு வெறி தானோ? தமது காதலி அல்லது காதலனின் கருத்தைக் கவர ஒவ்வொருவர் என்ன என்ன செய்கின்றனர் தெரியுமா? ஆனால் சட்டம் என்பது காதலருக்கு இரக்கம் காட்டாமல் தண்டித்து விடுகிறது!

ஒரு பிரெஞ்சுப் பெண் காஸ் கம்பெனியில் வேலை செய்யும் ஒரு வாலிபனைக் காதலித்தாள். அவனை அடிக்கடி சந்திக்க ஆசைப்பட்டாள். தன் வீட்டு காஸ் குழாய்களை (நம்மூரில் மின்சார சப்ளை போல அங்கு காஸ் சப்ளை) அடிக்கடி வேண்டுமென்றே கெடுத்து வைத்தாள். ஒவ்வொரு ரிபேருக்கும் அந்த இளைஞன் வருவான். அவனையே கண் கொட்டாமல் பார்ப்பாள் அந்தப்பெண். இது போல் 17 முறை நடந்தது காஸ் கம்பெனியார் விழித்துக்கொண்டு விட்டனர். அந்தப் பெண்ணுக்கு 1 வாரம சாதாரண காவல தண்டனை வாங்கிக் கொடுத்தனர். தன்மீது அந்தப் பெண் இவ்வளவு காதல் கொண்டுள்ளதை அறிந்த காஸ் கம்பெனி வாலிபன் அவளையே பின்னர் மணந்து கொண்டான்.

மற்றொரு அமெரிக்கப் பெண் இதுபோல ஒரு இளம் வக்கீல் மீது மோகம் கொண்டாள். தினந்தோறும் பகலில் மணிக்கு ஒன்றாகப் பன்னிரண்டு கடிதம் எழுதினாள் தன் காதலனுக்கு. அவன் சட்டை செய்யவில்லை. அவள் விடவில்லை. மணிக்கு ஒரு முறை போன் செய்தாள். அப்படியும் அவன் மசியவில்லை. அவளா விடுவாள்? அவன் வீட்டை நோக்கிப் படையெடுத்தாள். ஒரு கட்டு காதல் இசைத்தட்டுகளுடன் அவன் வீட்டு வாசலில் இரவெல்லாம காதல் இசையைப் பரப்பினாள். அவன் போலீஸாருக்கு ஆள் அனுப்பினான். அடுத்த நாள் மாஜிஸ்திரேட் அவளுக்கு 3 மாதம் தண்டனை அளித்ததும், இளைஞன் மனம் மாறிவிட்டது. 'நம்மேல் இவ்வளவு ஆசை இருக்கவேதானே இப்பெண் தண்டனை பெறுகிறாள்!'' என்று மனம் உருகி, விடுதலை யடைந்ததும் அவளையே மணந்துகொண்டான்!

ஆசையாக வளர்க்கிறார் அறுநூறு பாம்புகளை

யுத்தத்திற்கு முன் பர்மாவிலிருந்து ஓர் ஆங்கிலேயர் பாம்பு, தேள் முதலியவற்றை, உயிரோடு பிடித்துச் சேர்த்து வைத்திருந்தார். 1942-ல் அவர் சிங்கப்பூரில் ஒரு யுத்தக் கைதியான பிறகும் அந்த வழக்கத்தைக் கைவிடவில்லை. சமயம் கிடைத்த போதெல்லாம் காட்டிலும் புதரிலும் இருக்கும் பாம்பு தேள்களைப் பிடித்து-பிஸ்கட்டு டின் முதலியவற்றில பத்திரப்படுத்தி வைத்

திருந்தாராம். யுத்தக் கைதிகளைப் பல மைல் தூரம் நடத்திச்சென்ற போதும் அவர் மட்டும் இந்த டின்களைப் பத்திரமாகத் தன் தோளிலேயே எடுத்துச் சென்றாராம். அவரோடு பழகிய சிப்பாய்கள் கூட இந்த டின்களுக்கு உள்ளே இருந்தது என்ன என்பது தெரியாமல் இருந்தார்கள்.

இப்போது இங்கிலாந்தில் அந்த மனிதர் சுமார் 600 பாம்பு தேள்களைத் தமது வீட்டில் நல்ல பெட்டிகளில் வைத்து வளர்க்கிறார்.

ஆஸ்பத்திரி நிறைந்த அயர்

மற்றெந்த நாட்டைக்காட்டிலும் அயர்லாந்தில்தான் ஆஸ்பத்திரிகள் அதிகம். இது விகிதாசாரக் கணக்கில்தான். 67 பேருக்கு ஒரு ஆஸ்பத்திரி வீதம் அங்குள்ளது.

தெருக் குப்பையில பழங் கார்கள்!

வாராவாரம் 50 அல்லது 100 பழைய கார்கள் நியூயார்க் நகர வீதிகளில் கேட்பார் அற்றுக் கிடக்கின்றனவாம். புதுக் கார்களை வாங்குவோர் பழைய கார்களை, விற்பதற்கும் முடியாமல், வைக்க இடமும் இல்லாமல், தெருவில் குப்பையைப் போல் போட்டு விடுகிறார்கள்.

போலீஸ்காரர்களுக்கு இந்தக் குப்பை ' வண்டிகளைத் திரட்டி அப்புறப்படுத்துவது ஒரு பிரச்னையாக இருக்கிறது.

' ஐயா புதுக்கார் சொந்தக்காரர்களே! பழைய கார்களை எப்படியாவது நீங்களே விற்று விடுங்கள். குறைந்தது 100 டாலராவது (ரூ. 500) கிடைக்கும். இப்படிக் குப்பையில் போடாதீர்கள்!" என்று போலீசார் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

கண் இழந்தோருக்கு எலெக்ட்ரானிக் கழி

அமெரிக்காவில் பிராங்கிளின் இன்ஸ்டிட்யூட் சோதனைச் சாலையில் ஒரு சிறு எலெக்ட்ரானிக் கருவியைத் தயாரித்திருக்கிறார்கள். இது ஒரு கழி. இதைக் கொண்டு குருடர்கள் தைரியமாக வழி நடக்கலாம். தமக்கு முன்னால் இந்தக் கருவியை ஆட்டிக் கொண்டே போனால் போதும்; தரையில் கூடத் தட்டவேண்டாம். நடக்கும் வழியில் தடைகள் இருந்தால் கழி அதிரும். அல்லது கழியிலிருந்து காதுக்கு இணைக்கப்பட்ட ஒரு நுண்ணிய கருவியில் சப்தம் கேட்கும்.

ஆங்கில - ஜப்பான் மொழிபெயர்ப்பு யந்திரம்

ஆங்கிலத்தில் எழுதிய விஷயத்தை ஜப்பானிய மொழியில்மொழிபெயர்க்கும் கருவியை ஷிதிரு தாகஹாஷி என்பவர் தயாரித்துள்ளாராம். எலெக்ட்ரானிக் எண் கருவியின் தத்துவத்தில், தயாரான இக் கருவி இப்போது 1000 சொற்களை மட்டுமே மொழி பெயர்க்க வல்லது. பழகப்

பழக இதன் திறனை வளர்க்கலாம் என்று கருதுகின்றனர்.

ஆயிரம் ஆண்டுக்கு அமெரிக்க உப்பு

அமெரிக்காவில் உடா ராஜ்யத்தில் 75 மைல் நீளம, 50 மைல் அகலம உள்ள உப்பேரியில் கடலைவிட 8 மடங்கு அதிகம் உப்பு இருக்கிறதாம். அவ்வளவு உப்பு இருப்பதால் அந்த ஏரியுள் யாருமே மூழ்கிவிட முடியாது. இதிலுள்ள உப்பு உலக முழுவதற்கும் ஓராயிர ஆண்டு காலத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாம.

பொழுது போக்க 500 கணக்கு!

இங்கிலாந்தில் எஸ்ஸெக்ஸ் என்ற பகுதியிலுள்ள ஒரு சிற்றூரில் உள்ள ஹரியா என்ற 11 வயதுச் சிறுமிக்கு கணக்கில் ஒரு பித்து. பொழுது போகாவிட்டால் ஏதாவது கணக்கை எடுத்து வைத்து விடை தேடிக்கொண்டிருப்பாள். ஒரு முறை ஒரே மூச்சில் 500 கணக்கு வரை போட்டிருக்கிறாள்.

இந்த முயற்சியெல்லாம் வீணாகவில்லை. ஒரு ஸ்காலர்ஷிப் (உபகாரச் சம்பளம்) சம்பந்தமான பரீட்சையில் அவள் தன் திறமையைக் காட்டி ஆண்டுக்கு ரூ. 3,600 உபகாரச் சம்பளம பெற்றுவிட்டாள்!

தபால்களைத் தானே பிரிக்கும் இயந்திரம்

கடிதங்களின் உறையில் 'டைப்' அடிக்கதிருக்கும் விலாசங்களைப் படித்து அவை எந்த இடத்துக்குப் போகவேண்டுமோ அந்த இடத்துக் கடிதங்களோடு அவற்றைச் சேர்த்துவைக்கும் வேலையை தபால் நிலைய ஊழியர் செய்கின்றனர். தொல்லை மிக்க இந்த வேலையை இனி இயந்திரங்கள் செய்யக்கூடும. வெர்ஜீனியாவிலுள்ள ஒரு கம்பெனி அந்தப் புதிய மின்னணு இயந்திரத்தைச் செய்திருக்கிறது இன்டலிஜென்ட் மெஷின்ஸ் ரிசர்ச் அலக்ஸான்டிரியாக கார்ப்பரேஷன் என்பது அந்தக் கம்பெனியின் பெயர்.

ஒரு வினாடிக்கும் மிகக் குறைந்த நேரத்தில் அந்த இயந்திரம் உறையின் அடிப்புறத்தில் டைப் அடித்திருக்கும் ஊர்ப் பெயரைப் படித்துவிடுகிறது. எழுத்துக் கோடுகளின் நீளத்தையும் இடத்தையும் தடவிப் பார்த்து ஊர்ப் பெயரையும் ராஜ்யத்தின் பெயரையும் அந்த இயந்திரம் அறிந்துகொள்கிறது. வெவ்வேறு அளவுள்ள எழுத்துக்களையும அது தெரிந்துகொள்ள முடியும். அதற்கு ஒரு வழி செய்யப்பட்டிருக்கிறது.

தற்சமயத்தில் அந்த இயந்திரம் கையெழுத்தால் ஆகிய விலாசத்தைப் படிக்க முடியாது. எனினும் பெரும்பாலான கையெழு

(64-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மணம்

[க. தணிகைமணி]

பாரத நாட்டிலே குடியரசு நிறுவப்பெற்ற நாளிலே சென்னைக்கு வந்தார் ஒரு தமிழர். "வாருங்க, வாருங்க, பட்டணத்தில் குடியரசுத் திருநாளைப் பார்க்க வந்தீர்களா?" என்று கேட்டேன் நான். "இல்லை ஐயா! நான் படுகின்ற பாட்டுக்குப் பட்டணத்தில் வந்து திருநாளும் பார்க்கணுமா! நம்ம கேசு ஐக்கோர்ட்டுக்கு வந்திருக்கு; அதுக்காக ஒரு வக்கீலைப் பார்க்க வந்தேன்," என்றார் அவர்.

பழந் தமிழிலே பேசினார் அந்தத் தமிழர். கேசு, ஐக்கோர்ட்டு என்ற சொற்கள் ஆங்கிலம் என்று அவர் கண்டாரா? வக்கீல் என்பது அரேபியச்சொல் என்று அவர் அறிந்தாரா? அறியவேண்டிய அவசியந்தான் உண்டா? இல்லை.

"இப்படிப்பட்ட பதங்களைத் தள்ளிவிடவேண்டும்; பாரதப் பொது மொழியாகிய இந்திப் பதங்களையே கொள்ளவேண்டும்." என்று என் அருகில் இருந்த மேதாவி ஒருவர் ஆரம்பித்தார். கேசு என்பதற்குப் பதிலாக "வாதம்" என்று சொல்லவேண்டும்! ஐக்கோர்ட்டு என்பதற்குப் பதிலாக "உச்ச நியாயாலயம்" என்று உரைக்கவேண்டும்! வக்கீல் என்ற வார்த்தையைத் தள்ளிவிட்டு "அதிவக்தன்" என்று வழங்கவேண்டும்! இதுவே, பாரதமக்கள் ஒன்றுபட்டு வாழ்தற்குரிய வழி" என்று கூறினார், அம்மேதாவி.

அம்மேதாவியின் விருப்பம் நிறைவேறினால் மேலே சொன்ன கேசுக்காரத் தமிழரின் பேச்சு எப்படி இருக்கும் என்று பார்க்க வேண்டுமல்லவா? கேளுங்கள் சொல்லுகிறேன். "நம்ம வாதம் உச்சநியாயாலயத்திற்கு வந்திருக்குது; அதுக்காக ஒரு அதிவக்தனைப் பார்க்க வந்தேன்," என்று அவர் சொல்லவேண்டியதாயிருக்கும்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் என்னருகில் இருந்த மற்றொரு தமிழர்; உள்ளங்கிளர்ந்து எழுந்தார் "ஏன் ஐயா, 'வழக்கத்தில் இருக்கின்ற சொற்களைக் களைய வேண்டும்? பொருள் தெரியாத புதுச் சொற்களை அதற்காகப் புகுத்தவேண்டும்? ஆங்கிலமே வேண்டாம் என்பது அறிவுடைமையாகுமா? அப்படியே ஆங்கிலம் ஆகாது என்றால் எங்கள் அருந்தமிழில் அழகான சொற்களில்லையா? கரும்பிருக்க இரும்பைக் கடிக்கலாமா? குளிர் பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் விழலாமா? நல்ல தமிழ் நான் சொல்லுகிறேன்; கேளுங்கள்" என்று தொடங்கினார். கேசு என்பதற்கு வழக்கு என்ற அழகிய தமிழ்ச் சொல் இருக்கிறது. ஐகோர்ட்டு என்பதை

"உயர்நீதிமன்றம்" என்று தமிழகம் வழங்கி வருகின்றது. வக்கீல் என்பதற்கு வழக்கறிஞர் என்ற சொல் எவ்வளவு பொருத்தம்! எனவே, வழக்குக்காக வந்த தமிழர் நல்ல தமிழிலே பேசலாமே! 'நமது வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு வந்திருக்கின்றது. அதற்காக ஒரு வழக்கறிஞரைப் பார்க்க வந்தேன்,' என்று சொன்னால் அவர் வாய் மணக்காதா? கேட்கும் நமது செவி மணக்காதா" என்று வாதித்தார், அவர்.

எதிர்வாதம் செய்த மேதாவி வாய் மூடி மௌனியாய்ப் பறந்தார்.

—சென்னைப் பச்சையப்பன் கல்லூரி இதழ்.

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து விலாசங்களையும் படிக்கக் கூடியவாறு அந்த இயந்திரத்தை விருத்திசெய்யலாம் என்று கருதுகிறார்கள்.

அவர்கள் பணம் சேர்த்த வழி!

1933-ஆம் ஆண்டு வார்சாவில் ஆரோன் என்ற ஆணும், மேரி என்ற பெண்ணும் சந்தித்தனர். மணக்க விரும்பினர். இருவரும் திக்கற்ற அகதிகள். கையில் கால் காசு இல்லை. யோசித்தனர்.

திடீரென்று ஆரோன் "போலந்து நாட்டில் செல்வர்கள் நம் போன்ற ஏழைகளுக்குத் திருமணம் செய்துவைப்பதையே ஒரு தர்மமாக நினைப்பவர்கள். வா நாம் யாரையாவது கேட்கலாம்" என்று தன் காதலியுடன் ஒரு செல்வரை அணுகினர். அவர் இவர்களுக்கு மணம் செய்து வைத்ததுடன் "குடித்தனம் தொடங்க" சிறிது ரொக்கமும் கொடுத்தார்.

இவ்வளவு சுலபத்தில் சிறிது ரொக்கம் கைக்கு வந்தவுடன் அந்தத் தம்பதிகள் ஒரு திட்டம் போட்டனர். வாராவாரம் நாட்டின் வேறு வேறு பகுதிகளுக்குச் சென்று இதே நாடகம் ஆடி, இதே மாதிரி 'மணம்' செய்து கொண்டு செல்வர்களின் ஆசீர்வாதப் பணத்தையும் பெற்றுவந்தனர். நாளடைவில் இப்படியே நிறையப் பணம் சேர்த்துவிட்டனர்.

ஆனால் இவ்வகை அதிர்ஷ்டம் நீடிக்குமா? ஒரு செல்வர்—இவர்களுக்கு உதவியவர்தாம்—வேறொரு பேட்டையில் இவர்கள் மணத்துக்கு ஏற்பாடு செய்த வேறொரு செல்வரைச் சந்தித்தார். சென்ற வாரம் தன் செலவில் மணந்துகொண்ட தம்பதிகள் இவ்வாரம் மணப்பது ஏன் என்று அவருக்குப் புரியவில்லை. போலீசுக்குச் சொல்லி அனுப்பினர்.

பாவம், அப்போதுதான் மணந்துகொண்ட அந்தப் 'புது' தம்பதிகள் தமது ஹனிமூனை சிறையில் கழிக்கத் தயாராயினர்!

—"தினமணிச் சுடர்"

Edted, Priinted and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.